Registered No. M-4433. Madras War Review (TAMIL) 1 9-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம௵ செப்டெம்பர்௴ 1௳, வெள்ளிக்கிழமை இதழ் 52

14-ம்

படையினரே,

வணக்கம்!

☆

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
14-ம் படையினரே, வணக்கம்!	1	வானொலிநாட் குறிப்புக்கள்	10
முரசொலி	2	திடீர்ச் செய்திகள்	11
தலையங்கம்: கால மாறுதல்	3	சென்னைக்காரர்களே! உங்களுக்கு நன்றி	13
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4	இந்த வார உலக யுத்தச் செய்திகள்	14
அபூர்வ கற்பனை! தாய்மார் உள்ளம்	5	யுத்தநாட் குறிப்புக்கள்	14
5 வருஷம் போர் ஒரு ஆராய்ச்சி	6	பாட்டு: வாழ்ந்ததடா பாரீஸ்	16

முரசொலி

"இத்தாலி மீண்டும் சுயேச்சை பெற்று, முன்னேற்றமடைந்து, சமதானத்தை நாடும் நாட்டவர்களுக்குள் உரிய நிலையை அடையும் நன்னாளைக் காணும்போது, பிரிட்டிஷ் மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவார்களென்று நான் நம்புகிறேன்."

—மிஸ்டர் சர்ச்சில், இத்தாலிய மக்களுக்கு
ஆகஸ்ட்டு மாதம் 28-ம் தேதி விடுத்த செய்தி.

* * * * *

"ஜப்பானியரும் ஜெர்மானியரும் நிபந்தனை யில்லாமல் சரணாகதி யடைகிற வரைக்கும் தேவையான அளவிற்கு, நாம் தொடர்ந்து கடன் குத்தகைத் திட்டப்படி உதவிக் கொண்டிருப்போம். அப்போது தான், நேசப் படைகள் தகுந்தபடி பலமாக எதிரிகளைத் தாக்க முடியும்."

மிஸ்டர் ரூஸ்வெல்ட், தான் சமீபத்தில் வெளியிட்ட கால் வருஷத்திய
கடன குத்தகை யறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

* * * * * *

"ஜப்பானியர்களுக்குக் கஷ்ட காலம் ஆரம்பமாகிவிட்டது. இங்கிலாந்தில், அநேகத் தொழிற் சாலைகள் இபபோதைக்குத் தேவையான பல வசதிப் பொருட்கள் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவும் பிரிட்டனும் தம் முழு பலத்தையும் உபயோகித்து ஜப்பானோடு போர் புரியும். அஸ்ஸாமிலும் பர்மாவிலும் ஜப்பானியர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள். இங்கே மகத்தான வெற்றி பெற்ற படையினர் அனைவரும் பிரிட்டிஷ் சாமராஜ்யத்தைச் சேர்ந்தவர்களே. ஜெர்மனி தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருக்கும் போது, நாம் முழு மூச்சாகத் தாகக வேண்டு மென்பது தான் பிரிட்டிஷாரின் எண்ணம். யுத்த விதிப்படி, ஜெர்மனி தோற்று விட்டது என்று தான் சொல்ல வேண்டும். ஆனால், ஜெர்மானியத் தலைவர்களோ, எதற்கும் துணிந்தவர்கள். சமாதானம் ஏற்படுமானால் அவர்களுக்குப் பெரும் நஷ்டந்தான் ஏற்படும். ஆகவே, கடைசி வரை தாம் போராடுவது மட்டு மன்றி, தம் நாட்டு மக்களையும் போராடும்படித் தூண்டுவார்கள்."

ஹாலிபாக்ஸ் பிரபு, ஆகஸ்டு மாதம் 27-ம் தேதி வாஷிங்டனி லிருந்து
ஒலி பெருக்கிய பிரசங்கத்தில் குறிப்பிட்டது.

* * * * * *

"ஜப்பானியர்களோடு நாம் போராடும் போது, அவர்களுடைய மதத்தோடு போராடுகிறோமே யொழிய, அறிவுடைய மக்களோடு அல்ல. நாம் அவர்களை நெருங்க நெருங்க, மகா மிருகத் தனமான முறையில் நம்மோடு போராடுவார்கள்."

—மிஸ்டர் ஜேம்ஸ் வி பாரெஸ்டல்,
அமெரிக்கக் கப்பற் படை மந்திரி ஆகஸ்ட்டு மாதம் 22-ந் தேதி கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஞு செப்டெம்பர்மீ 1௨, வெள்ளிக்கிழமை | இதழ் 52

கால மாறுதல்

யுத்தம் ஆரம்பமாகி 5 வருஷங்கள் கடந்துவிட்டன. இதன் பலா பலன்களை எடுத்துச் சித்தரித்துச் சொல்லுவதற்கு, இங்கிலாந்தின் முதன் மந்திரியானதோர் சித்திரீகர் தான் தேவை. பெரும் போர்ப் படலம் என்னும் திரைமீது வர்ணங்களைக் கொண்டு சித்தரிக்கும் திறமை வாய்ந்தவர், அவர் ஒருவர் தான். நம்பிகை, எண்ணம், வீரம், துயரம், வெற்றி ஆகிய ஆழ்ந்த உணர்ச்சிகளைக் கண்ணியமான உரை நடையில் அமைத்து எழுத வல்லவர் அவர் தான். நடை பெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்களைக் குறித்து விளக்கிக் கூறுவதற்கு, க்ராம்வெல் வழிவந்த மண்ட்காமரி வேறொரு முறையைக் கையாளுகிறார். சந்தர்ப்பங்கள், யாரும் நம்ப முடியாத அளவிற்கு மாறி விட்டன. காலத்தின் போக்கை அவை குறிப்பிடுகின்றன.

இப்போதுள்ள நிலைமை நேச நாடுகளுக்குச் சாதகமா யிருக்கிற தென்று களக்க மறத் தெரிகிறது. இவ்வளவும் கடவுள் செயல் என்று கூறுவது பற்றி வெட்கமோ அச்சமோ அவர் கொள்ளவில்லை.

மனித வாழ்வின் லட்சியத்தில் ஒரு தத்துவம் புலனாகிறது. நன்மை வெற்றி பெறும்; தீமை தோல்வியுறும் என்பதே அத்தத்துவம். இது, இந்தியர், பிரிட்டிஷார், அமெரிக்கர், பிரான்சுக்காரர் ஆகியோரில் நேர்மையானவர்களின் உள்ளங்களில் ஆழப் பதிந்திருக்கிறது. இதைக் கடைசியாக நாம் நிலைநாட்ட 4 அல்லது 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆறாவது வருஷப் போராட்டத்தைப் பற்றி நாம் கவனிப்போமானால், இந்தத் தத்துவம் தகுந்த ஆதாரத்தின் மீது வகுக்கப்பட்டதென்றும், மீண்டும் வாழ்க்கை இன்பகரமானதாய் அமையும் என்றும், நம் மனதுக்கு உறுதிப்படுகிறது.

நமது அடிப்படையான நம்பிக்கையை நிறைவேற்றிக் கொண்டு வருவது பற்றி இந்த 1944-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3-ம் தேதி தலைவர்களுக்கும், படையினருக்கும் நேச நாடுகளில் உள்ள உள்நாட்டுப் போர்முனையாளருக்கும் நாம் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்போம். சென்ற வருஷம் தம் வீரச் செயல்களாலும் மனோ உறுதியாலும் அவர்கள் அற்புதங்களை நிகழ்த்திவிட்டார்கள். அவற்றிற்கேற்ற வெகுமதியும் கிடைக்கத் தக்க நிலைமையி லிருக்கிறது.

நேசப் படைகள் மேற்கு ஐரோப்பா மீது படை யெடுத்ததைப் போல், இது வரை, அவ்வளவு மகத்தான முறையில் ஒரு போதும் எந்தப் படையும் படை எடுத்ததே கிடையாது. இது நெடுநாட்களாக இராணுவ நிபுணர்களால் முடியாது என்று கருதப்பட்டதோர் வேலை. 1940-ம் வருஷம் போர் வெறி கொண்ட நாஜிகள் ஒரு முறை இது போலவே முயற்சித்து விரட்டியடிக்கப்பட்ட போதும், இதே கொள்கையாகத் தான் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த வேலை நமக்குக் கை கூடிவிட்டது. ஐரோப்பிய விடுதலைக் கொடியைப் பறக்க விடுகிறவர்கள், உண்மையிலேயே பொறுமைப்படத் தக்கவர்கள் தான். ஏனென்றால், பிரம்மாண்டமான யுத்தத் தளவாடங்களைக் கொண்டு தாம் எப்படி போர்க் களத்தில் புகுந்தார்கள் என்றும், ஜெர்மானியர்களின் மகா பலம் பொருந்திய அரண்களைத் துளைத்துக் கொண்டு அவர்களுடைய துறைமுகங்களை எப்படிக் கைப்பற்றினார்கள் என்றும், சொல்லுவார்கள். இந்தப் படை யெடுப்பின் பலாபலன்கள் மிகவும் முக்கியமானவை; உடனடியாகத் தெரியக் கூடியவை. தென்கிழக்கிலும் ஐரோப்பாவின் எல்லைப்புரத்திலும் இப்பலாபலன் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பால்கன் நாடுகளிலுள்ள மக்கள், மனோ பீதி கொண்டு செய்வதின்ன தென்று தெரியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ருமேனியா வரிந்து கட்டிக்கொண்டு போருக்கு ஆயத்தமாகி விட்டது. பல்கேரியா சிதறிவிடத் தக்க நிலைமையி லிருக்கிறது. இந்நாடுகளும் மற்ற தந்திர முறைகளைக் கையாண்ட நாடுகளும் என்னதான் தம் பழைய செயல்களைப் பற்றி வருத்தத்தை தெரிவித்துக் கொண்டாலும், அவை தகுந்தபடி நியாயம் செலுத்தப்படத் தான் வேண்டும். ஏனென்றால், அவற்றிற்குக் கண்ணியமும் அறிவும் இல்லாததனால், கொள்ளைக்காரர்களும் ஜெர்மானிய துரோகிகளும் எந்த வகைத் தண்டனைக்கு உரியவர்களோ, அதே தண்டனை இவர்களுக்கும் விதிக்கப்பட வேண்டும். துருக்கித் தன் பழைய நண்பனான ஜெர்மனியைக் கைநழுவி விட்டது. கிழக் கோடியில் ஜப்பானியர்கள் செய்வதின்ன தென்று தெரியாது தலையைச் சொரிகிறார்கள். தலைவர்களை மாற்றுகிறார்கள். இதற்குக் காரணம் தம் கப்பல்களும் விமானங்களும் குறைந்து கொண்டு வருவது தான். 'கூட்டு முன்னேற்றத் திட்டம்' அவர்கள் பிடியினின்று நழுவுகிறது. ஜப்பானிய சாம்ராஜ்யமே அழிந்து விடக் கூடுமோ வென்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அப்போது நமது எதிரிகளுக்கு நியாயப்படி பரிபூரண "மரியாதை" நடக்கத் தான் செய்யும்.

'நரகக் குழியிலும், ரத்த ஆற்றிலும், நேசப் படைகளின் டாங்கிகள் தாண்டிச் செல்ல முடியாதபடி பிணக் குவியல்களாகவும் எதிரிகள் இப்போதிருப்பதாகவும், இனியும் இப்படியே இருப்பார்களென்றும், கூறி விளம்பரம் செய்யும் செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களல்ல நாம். சிதறுண்டு போய், மனத்துயரால் பித்தங் கொண்டவர்களைப் போலிருக்

கும் ஜெர்மன் யுத்தக் கைதிகளைப் பார்த்து, "உலகத்தையே கட்டியாளவேண்டுமென்று ஆசை கொண்டவர்கள் இவர்கள் தான்" என்று நையாண்டி செய்யும் அமெரிக்கர்களோடு நாம் கை கோர்ப்பது மில்லை. இந்த வெற்றித் திட்டத்தை வகுத்தவர்களின் உறுதியான பிடிவாதத் தன்மையையும், ஒற்றுமையையும், அமைப்புத் திறமையையும், போர்த் தந்திரப் பேரறிவையும் நாம் பாராட்டுவதே போதுமானது. அவர்கள், ஆகயத்திலும், கடலிலும், தரைப் போர்முனைகளிலும் போராடும்படி அனுப்பிய போர்வீரர்களின் உணர்ச்சிக்கும், வீரத்திற்கும், ஒழுக்கத்திற்கும் நாம் தலை வணங்குவோம். வெல்ல முடியாத போர்த் தந்திர நுட்பங்கள், ஒடுக்கப்பட்ட நாடுகளின் மீட்சி, மக்கள் நம்பிக்கையின் மறுமலர்ச்சி ஆகியவற்றை நாம் காணலாம்.

இந்தப் போர் ஆரம்பமாகி இத்தனை வருஷங்களாக இல்லாமல், இந்த வருஷம் நமது கவனத்தைக் கவருபவை இவை தான். யுத்தச் சோர்வை நாம் பொருட்படுத்தமாட்டோம்; வெற்றி நிச்சயம் என்பது பற்றியும் நாம் பெருமிதங் கொள்ள மாட்டோம், இவற்றின் பொருட்டுப் பிரமாதமான ஒற்றுமையோ பெருமுயற்சியோ நாம் மேலும் செய்யவேண்டியதில்லை. மக்கள் இனத்திற்குத் தெய்வீக உணர்ச்சி யுண்டு. சென்ற வருஷம் நடைபெற்ற கொடும் போராட்டம் இதற்குக் கொஞ்சமும் பொருந்தாது. "போரில் கடவுள் நமக்கு வெற்றி தந்தார்; போராட்டம் முடியுங்காலம் நெருங்கிவிட்டது; குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக நாம் நம் வேலையைச் செய்து முடித்து விட வேண்டு"மென்று ஜெனரல் மண்ட்காமரி கூறுகிறார்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

மேற்கொண்டு என்ன?

அடுத்த அக்டோபர் மாதத்திலேயே யுத்தம் முடிந்து விடுமென்று முன்னறிக்கை செய்வதற்கு, கல்கத்தா லாமா போன்றவர்களுடைய அதிமானுஷ்ய சக்தி படைத்தவர்கள் தேவை யில்லை. இப்போது மேற்கொண்டுள்ள படை யெடுப்பு ஜெர்மனியின் உள் நாட்டையே தாக்குவதாகுமென்று ஒவ்வொரு சோல்ஜருக்கும் நன்ருகத் தெரிந்து இருக்கிறது. இதைக் கூறுவதற்கு கல்கத்தா லாமா தான் ஒரு தனிப் பெருந் தீர்க்கத் தரிசி என்று கருதப்பட வேண்டியதில்லை. ஏனென்ருல், உலகிலுள்ள எல்லா நாடுகளின் பொது மக்களுக்கும் இது தெரிந்தது தான். நமது லட்சியம் மிகவும் நேர்மையானது என்று அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிருர்கள். ஆகவே தான், அவர்கள் அனைவரும் ஒன்றுபட் டிருக்கிருர்கள். இன்று வரை ஒரே கொடிக் கீழிருந்து போராடிக் கொண்டிருக்கிருர்கள். இந்தக் கொடி உலகம் முழுதும் தன் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. பல நூற்றுண்டுகளாக அரும் பாடு பட்டுச் சமைத்திருந்த கலைச் சின்னங்களையும் நல்ல வேலைப் பாடுகளையும் ஏறக்குறைய சினத்தவர்களை அழித்து விட்டது.

இந்த அழிவு வேலைக்குப் பொறுப்பாளிகள் அந்தக் குச்சு மட்டைக்காரனும், அவனைச் சேர்ந்த வீண் டம்பக் காரர்களான ஜெர்மன் படையினரும் அவனோடு ஒத்துழைப்பவர்களும் தான். இவர்கள் அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நாள் நாளிது செப்டம்பர் மாதம் 3-ம் தேதி. உலகம் முழுதும் நாஜி மயமாக்கி விடவேண்டு மென்று அவர்கள் கண்டு கொண்டிருந்த தீய பகற் கனவுகளெல்லாம், மாயமாய் மறைந்து விட்டன. கொள்ளைக் கூட்டத்தார் தன் தலைவனை விட்டுத் திருந்தி, விலகி, எப்படி நல்லவர்களாகிருர்களோ, அதுபோலவே, ஹிட்லருடைய "நண்பர்களும்" அவரை விட்டு இப்போது விலகுகிருர்கள்.

"ஹிட்லர் உயிரோடிருக்கும் போதோ இறந்த பிறகோ அவருக்கு என்ன நேருகிறது என்பது பற்றி நமக்குக் கவலை யில்லை" என்று விக்ஹாம் ஸ்டீட் என்பவர் குறிப்பிட்டார். நமக்கு வேண்டிய தெல்லாம் ஹிட்லர் கோஷ்டியாரும் அவர்களுடைய இராணுவமும் ஒழிய வேண்டு மென்பது தான். ஆகவே, சென்ற 5 வருஷத்திய யுத்தத்தின் பயனாக, ஒரு மாபெரும் பணியை மேற்கொள்ள வேண்டிய அவசிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆதிக்க வெறியே நோக்கமாகக் கொண்ட பேர்வழிகள், நாடுகள், முதலாளிகள், அரசியல் வாதிகள் ஆகியோரின் உள்ளங்களைச் செம்மைப் படுத்த வேண்டும். யுத்த காலம் முழுவதிலும் சமாதானமும் புனருத்தாரணமும் ஏற்படுகிற வரையில், ஆசியாவிலும் ஐரோப்பவிலு முள்ள கலா க்ஷேத்திரங்களெல்லாம் பாதுகாக்கப்படும் பொருட்டு அறிவின் பலமும் அன்பின் வீரமும் துலங்கிக் கொண்டே யிருக்க வேண்டும்.

சென்ற திங்கட்கிழமை டில்லியில் விளம்பர ஆலோசனைக் கமிட்டிக் கூட்டமொன்று நடை பெற்றது. அப்போது வைசிராய் சபை யங்கத்தினரான கனம் சர் அகமத் சுல்தான் ஒரு பிரசங்கம் செய்தார். அங்கே தேசீயப் போர் முனை செய்து வரும் வேலையைப் பற்றிக் குறிப்பிட்டார், அவர் கூறியதாவது:—

"இது மிகச் சிறந்த விளம்பர சாதனம். இனி ஏற்படப் போகும் புனர் நிர்மாண காலத்தில் இதை எந்த வகையில் பயன் படுத்திக் கொள்ளலாமென்று நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்."

இந்தியாவும் கப்பல் தொழிலும்

இந்திய கப்பற் படையைச் சேர்ந்த ப்ளாக் ஆபீசர் கமாண்டிங் வைஸ்-அட்மிரல் ஜே. எச். காட்ப்ரே இந்த வாரம் சென்னைக்கு விஜயம் செய்தார். இந்திய மக்கள் கப்பற்றொழிலை மேற் கொள்ள வேண்டி தனக்குள்ள ஆவலை அவர் தெரிவித்தார். இந்தியாவிற் கென்று ஒரு பெரிய கப்பற் படையும், அப்படையினருக்கு ஒரு சங்கமும், மாலுமிகள் உதவி நிதிக்கு ஒரு பெருந் தொகையும் திரட்டப் படவேண்டு மென்று அவர் குறிப்பிட்டார். இந்த வாழ்க்கையை மேற் கொள்ளுகிறவர்கள் அரசியலில் கலந்து கொள்ளலாகாது என்றும் கூறினர். கடற்கரையே காணாத பஞ்சாப் மாகாணத்தி லிருந்து ஏராளமான பேர்கள் கப்பற் படையில் சேர்ந்திருப்பது பெரிதும் ஆச்சரியப்படத் தக்க விஷயந்தான். என்ருலும் இந்திய மக்கள் கப்பல் தொழிலை வெறுத்து தரையிலேயே வாழ்ந்து வந்தவர்களல்ல. இந்தியர்கள் வெகு தூரம் கப்பல் பிரயாணம் செய்தார்கள். இது பற்றிய கல் வெட்டுகள் இன்றும் ஜாவா தீவிலுள்ள போரோபோடூரில் காணப்படுகின்றன. தலைமைப் பதவியை ஏற்கக் கூடியவர்கள் கப்பற் படைக்குத் தேவை. கப்பலில் இந்தியப் பெண்களின் உதவிப் படையுந் தேவை. இந்த உதவிப் படையினர் கரையோரங்களில் தான் வேலை செய்ய வேண்டும். மாலுமியோ ஒரு சோல்ஜருக்கு வேண்டிய தகுதிகள் மட்டுமன்றி, ஒரு புதிய வாழ்வில், அதாவது கடல் வாழ்வில் அக்கரை கொண்டவரா யிருக்க வேண்டும். இப்போது ஐரோப்பாவில் யுத்தம் முடிவடைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, கூடிய சிக்கிரத்தில், கீழ் நாடுகளில் போரை மும்முரமாக நடத்த ஆரம்பிப்போம். புதிதாகப் படையில் சேருகிறவர்களைப் பயிற்றுவி பதில் கப்பற் படை மிகவும் அக்கரை கொண்டிருக்கிறது. வீர இளைஞர்களுக்கும் தூர திருஷ்டியுள்ள பெற்றோர்களுக்கும் கப்பற் படை மிகச் சிறந்த சந்தர்ப்பம் அளிக்கிறது. ஏனென்ருல், அவர்கள், ஜப்பானியர்களை விரட்டி, அவர்கள் கைப் பற்றி யிருந்த அநேக தீவகங்களை மீட்பார்கள். எதிரி இந்தியாவில் நுழைய முடியாதபடி அடியோடு தடுத்து விடுவார்கள்.

(௭-ம் பக்கம் பார்க்க)

அபூர்வ கற்பனை

தாய்மார் உள்ளம்

("கோஹினூர்" எழுதியது)

[பொதுவாக நாடுகளை அன்னை என அழைப்பார்கள். நாடுகள், அந் நாட்டின் மக்களுக்குத் தாய். இந்நிலையில் இப்பொழுதுள்ள பற்பல அன்னைகள் (நாடுகள்) என்ன நினைப்பார்கள்? பேசும் சக்தி யிருந்தால் என்ன பேசுவார்கள்? அவர்களுடைய இருதய சிந்தனைகள் தான் யாது? படியுங்கள்.]

பிரிட்டன்

அன்புடைய மக்களே! நீங்கள் நீடூழி வாழ்க!! ஹா! என் செல்வங்களே! பற்பல நாட்டின் சுதந்திரத்திற்காக உங்கள் உயிரையே தியாகம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களே! பலே பேஷ்! கொ ர கல் நெஞ்சனை ஒழிக்க என்ன பாடு படுகிறீர்கள்!! அந்த ஹிட்லர் பயல் உங்களை என்ன என்னமோ செய்து விடுவேன் என்றான். அதை கேட்டு, "ஐயோ! என் பிள்ளைகள் ஆயுதம் இல்லாமல் சாதுவாக இருக்கிறார்களே! என் மகன் சேம்பர்லேன் ஹிட்லரிடம் ஓடி, ஓடி சமாதானம் பேசுகிறானே! ஊரார் வீட்டு பிள்ளைக்கு என் பிள்ளைகள் பயப்படுகின்றனரே!" என கதறினேன். ஆனால் என்னை தேற்ற எனக்கு ஓர் வீர மகன் கார்டியனாக நிறுவப்பட்டதை கேட்டதும் மகிழ்ந்தேன். ஆம்! வீர மகன் தான் ஸ்ரீ சர்சில். அபாரமான ராஜ தந்திரி தான். அம்மகனாலேயே தான் இன்று அந்த ஹிட்லர் கதி கலங்கும் நிலைமைக்கு வந்தான். சபாஷ் என்னுயிர் மக்களே! எங்கே உங்கள் வீரத்தை இன்னும் காட்டி சீக்கிரம் உலகத்திற்கு சமாதானத்தை கொண்டு வாருங்கள். சர்ச்சிலே! நீ நீடூழி வாழ். உன் அன்னையின் கௌரவத்தை நிலை நாட்டு. உன் தோழி அமெரிக்காவின் மகன்—ஸ்ரீ ரூஸ்வெல்டுடன் சமாதானமாக இரு. ருஷியாவின் மகன் ஸ்டாலினோடு விரோதித்துக் கொள்ளாதே! என புகழை நிலை நாட்டு. உன் தம்பிகளை (இதர பிரிட்டன் மக்கள்) நன்றாய்க் கவனி. பேஷ்! உன்னை உலகமே புகழுகிறது. ஈன்ற பொழுதினும் மிக உவக்கிறேன். என் மகனை சான்றோன் என கேட்ட பொழுதே! அடடா! உங்கள் வேலையைப் பாருங்கள். வெற்றி நமதே!

அமெரிக்கா!

என் செல்வங்களே! உலகத்தின் சுக வாழ்விற்காக பாடுபடும் என்னருமை மக்களே வாழ்க! நாகரிக காலனாகிய ஹிட்லரை ஒழிக்கப் பாடுபடும் என் பிள்ளைகளே வாழ்க! எனக்கு உங்கள் ஆசீர்வாதத்தால் சுதந்திரம் கிடைத்தது. ஆனால் நீங்கள் சண்டையிட்டு கொள்ளாமல் அரசு புரிவது மிகமிகச் சந்தோஷமே! என் சிரேஷ்ட ரூஸ்வெல்டே! நீடூழி வாழ். எனக்கு நீ மூன்று முறை அல்ல 30 முறை வேண்டுமானாலும் கார்டியனாக இரு. என் தோழி பிரிட்டன், ரஷியா, இவர்களை விரோதித்துக் கொள்ளாதே! கிழக்கே வாலாட்டும் குள்ள ஜப்பானை ஒழிப்பது உன் பொறுப்பு. உனது ஆயுதங்களையும் ஆட்களையும் எத்தனையோ தேசங்கள் எதிர் நோக்குகின்றன! உதவி செய்! பரோபகாரமே பகவானின் விருப்பமான குணம். உலகத்தில் என் தாயைப் போன்ற செல்வி இல்லை என்ற புகழ், உங்களுக்கே உரியது. ஹூம்! விடாப் பிடியாக நமது இழந்த பசிபிக் தீவுகளை விரைவில் கொண்டு வாருங்கள் சீக்கிரம்.

ரஷியா!

பசி யற்ற பாலர்களே! வாழ்க! வாழ்க!! ஹி! ஹி! ஹி! ஹி! வீர புதல்வர்களே! உங்களது திட மனது எப்படிப் பட்டதோ? என் தலையிலேயே (ஸ்டாலின் கிராடு) கைவைத்த அந்தக் கொடும் நாஜியர்களை விரட்டு. அவர்கள் தலையில் கை வைக்கும் உங்கள் புகழ் எப்பேர் பட்டது! உலகம் வியக்கும் உத்தம ஸ்டாலினே! என் செல்வனே! உனது தயங்கா நெஞ்சும், அஞ்சா வீரமும் பல் நூற்றாண்டுகள் விளங்கட்டும். சீக்கிரம்; இன்னும் கொஞ்சம் தான். என மானத்தை, பெருமையை போக்க வந்த அந்த ஹிட்லரை என் கண் முன்னே ஒழியுங்கள். அந்த நாஜி தியர்களைக் கொல்லுங்கள். என புதல்விகளின் கற்பைக் கெடுத்து அவர்கள் உயிரைக் கொள்ளையிட்ட கொடும் நாஜிகளை உதையுங்கள். துண்டு துண்டாக வெட்டுங்கள். ஸ்டாலின்! அஞ்சாதே! என் ஆசீர்வாதம் உனக்கும் உன் தம்பிகளுக்கும் நிற்கட்டும்!

ஜெர்மன்

மகனே! நீ பெற்ற இகழ்ச்சிகள் போதாவா? இன்னுமா அவை வேண்டும்? ஏன், அதோ நாற்புறமும் பார்! வடக்கே தீ போல் பரவுகின்றது செஞ்சேனை. கிழக்கேயும் அப்படியே. மேற்கே சிங்கங்கள் உறுமிக் கொண்டு வருகின்றன. இவ்வளவு நெருக்கடியில் ஏன் இன்னும் பிடிவாதம்? என்னம்மா அச்சு, அச்சு என்று இத்தாலி, ஜப்பானுடன் கூடினாய். இப்பொழுதோ! அச்சு முறிந்து விட்டது போல் இத்தாலி இறந்தாள். ஜப்பான் காலரா வியாதியில் வீழ்ந்து விட்டாள் உனக்கோ பக்க பலமில்லை. இந் நிலையில் ஏன் இன்னும் யுத்தத்தை நடத்துகிறாய்? 1918-ம் வருடம் கண்ணீர் விட்டாய். அன்று என் மானம் போனதையும் கவனியாமல் என் அருமை மகன் என்னை மீட்டான் என நினைத்தேன். ஆனால் நான் செய்த பாவம் இன்று கற்பிழந்து (பெருமை) வெட்கமின்றி நானும் ஒரு தாய் (நாடு) என என்னை நினைக்கிறேன். அதோ பார்! பிரிட்டன் மகன் அந்தோனி ஈடன் உன்னை "நிபந்தனை அற்ற சரணாகதி" கேட்கிறான். வடக்கே பார் ஸ்டாலின், "பழிக்கு பழி" எனப் பதறுகிறான். ஏன் இன்னும் என் முகத்தில் விழிக்கிறாய்? போ-போ என் முன் நில்லாதே! மகனைப் பெற்று மகிழ்ச்சி அடைகிறார்கள் பிரிட்டன், அமெரிக்கா, ரஷியா முதலியவர்கள். நானோ இடும்பனைப் பெற்று இகழ்ச்சி அடையப் போகிறேன்; ஏன் அடைந்து விட்டேன். ஹா! அதோ உலகத்தினர் என் மகனை "புழுகரசன்" என்கிறார்கள். என் கௌரவமே போய் விட்டதே! இதோ நாண் கொண்டு சாகப்போகிறேன். மானமெல்லாம் போன பின் வாழ்வதுவும் வாழ்வா?

இத்தாலி

ஐயோ! நான் இருந்த புகழ் என்ன! கீர்த்தி என்ன! பெருமை என்ன! என் அழகுக்காக எத்தனை பேர் போட்டியிட்டனர்? நான் அணிந்திருந்த ஆபரணம் (கலைகள்) எங்கே? இறப்பதற்கு முன் பார்க்க வேண்டிய நேபிள்ஸ் எங்கே? ரோமராஜ்யம் என்று 2,000 வருடங்களாக இருந்த பெரும் பெயர் எங்கே? மகனே! என்னை காட்டிக் கொடுத்துவிட்டு ஓடின முஸலோனி!! உன்னாலன்றோ நான் இக்கதிக்கானேன். "பன்றியுடன் கூடிய கன்றும் மல முண்பது" போல் ஹிட்லருடன் கூடி கெட்டாயே! அதோ பார்! மாண்புடன் விளங்கிய ப்ளாரன்ஸ் நகர மாட்சி மறைகிறது. ஐயோ செல்வனே! நான் எக்கேடு கெட்டால் தான் என்ன! உன்னைக் கூட சிறைப்படுத்தினார்களாமே! அப்பொழுது என் மனம் கொதித்ததே! நல்ல வேளை அந்த ஹிட்லர் உன்னை தப்புவித்து விட்டான். இருவரும் கூடி சீக்கிரம் அந்த நேச நாட்டினரை துரத்த நினைப்பீர்கள......... ஆனால் அது முடியாத காரிய மல்லவா? அப்பப்பா சமுத்திர ஜலம் போல் துருப்புகள். எக்கேடு கெட்டாவது மடியுங்கள் எனக்கென்ன? தாய் சொல்லைக் கேட்டு நடந்தால் தானே? என்னமோ வட ஆப்பிரிக்காவிலும், கிரீஸிலும் துள்ளினாயே! இன்று எங்கே போனது உன் வீரம்! பேடி மகனே! தாயை காட்டிக் கொடுத்த பாதகா! இனி என் முகத்தில் விழியாதே!

ஜப்பான்

அருமை மக்களே! சபாஷ் பர்மாவை முழுவதும் கைப்பற்றினீர்கள். இந்தியாவிலும் கால் வைத்தீர்கள். பேஷ்! ஆனால் ஏன் கலங்குகிறீர்கள். டோஜோ! நீதானப்பா புத்திசாலி. வெள்ளம் வருமுன் அணை போட்டாய்! பலே பேஷ்! கோய்ஸோ! ஒன்று சொல்லுகிறேன். சீக்கிரம் சரணாகதி அடை. அல்லது இன்னும் சில மாதங்களில் ஹிட்லரும்—முஸலோனியும் உன்னிடம் வருவார்கள். மூவருமாக சேர்ந்து எமனுலகத்திற்கு போகலாம். எந்த யோசனை நல்லதோ அப்படிச் செய். "கிழக்கு சூரியன்" என்ற பெயர் என்று மேற்கு சூரியன் ஆகப்போகிறதோ தெரியவில்லை. ஐயோ கடவுளே! நல்ல பிள்ளைகளப்பா! வாலை அடக்கத் தெரியாமல் இப்படியா உயிரைக் கொடுப்பது? என் புகழுக்கும் உலை வைத்துவிட்டீர்களா?

5-வருஷப் போர்

உலகத்தையே விழுங்க விருந்தது பாஸிஸம் என்னும் கொடும் பேய். உலகம் மக்கள் திரண்டெழுந்து அதை

3-9-1939-ல்

ஐரோப்பிய ஒளி அணைந்து ஐந்து ஆண்டுகள் ஆயின. இதற்குக் காரணம் ஹிட்லரும் அரசாங்கங்களின் குரோத புத்தியுந் தான். மக்கள் இனத்தின் அன்புக் குறைவினால் அந்த ஒளி அணையவில்லை; ஆனால், பாதுகாப்பற்றிருந்ததனால் தான். உலகம் முழுதும் தோன்றிய இருட்டடைப்பு, அந்த ஒளி மங்குவதை எடுத்துக் காட்டியது.

1939, **அஞ்சத் தக்க வருஷம்.**—ஜெர்மன் படைகளின் கடுந் தாக்குதல்களாலும், ஜெர்மன் இரகசியப் போலீசாரின் கொடுமைகளாலும் ஐரோப்பா நடுங்கிக் கொண்டிருந்தது.

1940, **விழிப் பேற்பட்ட வருஷம்.**—சமயத்திற் கேற்ப சர்ச்சில் கிளம்பினார். ஏனென்றால், பலம் தேவையா யிருந்தது. இனி என்ன வெல்லாம் நேரக் கூடும் என்பதற்கு டன்கர்க் சம்பவம் ஒரு எச்சரிக்கையா யிருந்தது. பிரிட்டன் தனித்திருந்து தன் பலத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தது. இதைப் பரீட்சிக்கும் பருவம் வந்தது. பலவீனமான நாடுகளின் மீது ஜெர்மன் படைகள் வெகு சுலபமாகப் படை யெடுத்துக் கைப்பற்றிக் கொண்டன. இரண்டு மாத காலம் இடைவிடாது பிரிட்டிஷ் மக்கள் தாக்கப் பட்டனர். அதே வருஷந் தான் பிரான்சு தகர்ந்து கொண்டிருக்கும்போது, துரோகத் தனமாக அதன் மீது படை யெடுத்தார் முசோலினி.

1941, **அனுபவங்கள் நிறைந்த வருஷம்.**—உலக முழுவதையும் கப்பி வருத்திக் கொண்டிருக்கும் இந்தக் கொடுமையோடு போராடி வெல்லுவ தெப்படி என்று சுயேச்சையை நாடும் அறிவுப் படைகள் திரண்டு ஆலோசிக்கின்றன. ஜெர்மனிக்கு மேலும் மேலும் வெற்றி. இந்த வருஷ மத்தியில் ஜெர்மனி ரஷ்யா மீது பாய்ந்தது. ஜெர்மனி லிபியாவுக்குள் புகுந்தது; ஆனால் அபிசீனியா மீட்சி பெற்றது. இத்தாலியின் வீழ்ச்சி ஆரம்பமானது. க்ரீட்டில் நேர்ந்த தோல்வி ஒரு பெரும் படிப்பினை யாகும். ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி அட்லாண்டிக் பிரகடனம் கையொப்ப மிடப்பட்டது. ஆனால் ஜெர்மனியின் போக்கு வெகு விரைவா யிருந்தது. வருஷக் கடைசிக்குள் நாஜிகள் ராஸ்டோவ் வந்து சேர்ந்து விட்டார்கள்.

உலகம் முழுதும் பாஸிஸம் தலை தூக்கியது. தான் மிகவும் பாதுகாப்போடிருந்ததாக மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அமெரிக்காவை, ஜப்பானியர்கள் ‘பெர்ல்’ துறைமுகத்தைத் தாக்கி, விழிக்கச் செய்து விட்டார்கள். உடனே பாசிஸ்ட் அரசாங்

ஒரு ஆராய்ச்சி

இதைச் சமாளித்து மீண்டது ஒரு பெருங் காதை, நேச நாடுகளின் பொது வென்று, உலகைக் காத்தனர்.

3-9-1944-ல்

கங்களோடு அமெரிக்கா போருக்குக் கிளம்பியது.

1942-ல் பாஸிஸ்ட் ஆதிக்க வேட்டை.—உலகத்தையே கட்டியாள வேண்டுமென்று பாஸிஸ்டுகள் நாடினார்கள். நியூ கினியிலிருந்து பர்மா வரை ஒவ்வொரு தீவாக ஈவிரக்கமில்லாமல் ஜப்பானியர் தாக்கிக் கொண்டு வந்தனர். இந்தியக் கடற் கரை மீதும் இரண்டொரு குண்டுகள் வீசினார்கள். சென்னைக் கடற் கரை தாக்கப்படக் கூடிய நிலைமையிலிருந்தது. வெளி நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்து சேர்ந்த லட்சக் கணக்கான மக்களைச் சமாளிக்க வேண்டிய பெரும் பிரச்சினை இந்தியாவுக்கு ஏற்பட்டது. அரசாங்கமும் பொது மக்களும் முன் வந்து உதவி நிலைமையைச் சமாளித்தார்கள்.

இதற் கிடையில், ஜெர்மன்படைகள் ஸ்டாலின் கிராட் வந்தடைந்து விட்டன. ஜெர்மானியரும் ஜப்பானியரும் தம் உச்ச நிலையை யடைந்து விட்டனர். நேச நாட்டினர் தாக்குகின்றனர். இனி என்ன நிகழப் போகின்றன வென்பதற்கான அறிகுறிகள் தோற்றுகின்றன. மால்டா தைரியமாக எதிர்த்து நின்றது. நேச விமானப் படைகள் எதிரிகளைத் திருப்பித் தாக்கிக் கொண்டிருந்தன. அக்டோபர் மாதம் 23-ம் தேதி 8-ம் படை எகிப்தை மீட்டது. ரோமல் பின் வாங்கினார். 16 நாட்களுக்குப் பிறகு, நேச நாட்டுக் கப்பற் படை யொன்று ஆப்பிரிக்காவின் மேற்கு கரையில் வந்திறங்கியது. ஆப்பிரிக்கா மீட்சி பெற்றது. ஸ்டாலின் கிராட் முற்றுகை நீங்கியது. பல நூறு மைல்களுக்கப்பால் ஜெர்மன் படைகள் விரட்டப்பட்டன.

1943, ஓங்கும் வருஷம்.—நேச நாடுகளின் கை வலுத்தது. காசப்ளங்கா மகாநாட்டில் தான் இது ஆரம்பம். கெய்ரோவிலும் டேரானிலும் மகத்தான 2 மகாநாடுகள் நடைபெற்றன. இவ்விரண்டிற்கும் சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் விஜயம் செய்திருந்தனர். முதல் மகாநாட்டிற்கு ஜெனரலாசிமோ ஷியாங் கெய் ஷேக்கும், இரண்டாவது மகாநாட்டிற்கு மார்ஷல் ஸ்டாலினும் விஜயம் செய்திருந்தனர். இந்த வருஷம் பெரும் ஆயத்தங்கள் நடைபெற்றன.

ஆப்பிரிக்காவில் 8-ம் படையைச் சேர்ந்த இந்திய வீரர்களுக்கு மன்னர் பிரான் போர் விருதுகளைச் சூட்டிக் கொண்டிருக்கும் போது, ஐரோப்பியத் தாக்குதல்

(14-ம் பக்கம் பார்க்க)

வீரனுக்கு இருட்டு ஒரு பொருட்டா?

சுபேதார் ஷேர் முகமத் 16-வது பஞ்சாப் படையைச் சேர்ந்தவர். ஒரு நாள் இவருடைய ஆட்கள் வசம் ஒரு கைத்துப்பாக்கியும் கையால் எறியப்படக் கூடிய சில குண்டுகளும் தவிர, மற்ற எல்லாத தளவாடங்களும் அழிந்து விட்டன. அவர் மீது ஒரு உத்தரம் விழுந்து அதற்குள் அவர் சிக்கிக் கொண்டார். என்றாலும், அதினின்று விடுவித்துக் கொண்டு, தன் ஆட்களை யெல்லாம் திரட்டி, இருட்டில் தடவிக் கொண்டே டெலிபோனிடம் போய், பீரங்கிகளைக் கொண்டு ஜெர்மானியர்களைச் சுடும்படி ஏவினார். பிறகு காயப்பட்ட தன் ஆட்களை யெல்லாம் மீட்டுக் கொண்டார். தன் கடமையைச் சிறந்த முறையில் நிறைவேற்றிய அவருக்கு 'மிலிடரி க்ராஸ்' பதக்கம் வழங்கப்பட்டது நியாயந் தான்.

15 பேர்களை விரட்டிய மூவர்.

சித்தூர் ஜில்லா கனிப்பாக்கப் பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த லான்ஸ் நாயிக் கிருஷ்ண ரெட்டி பர்மா போர் முனையிலுள்ள 3-வது சென்னைப் படையி லிருக்கிறார்.

ஒரு நாள் அடர்ந்த காட்டு வழியே அவர் போகும் போது, தனக்குப் பின்னே எதோ ஓசை கேட்டது. திரும்பினார். ஜப்பானியர்களைக் கண்டார். அப்போது அவர்களுள் ஒருவன் ஒரு சிறு வெடி குண்டை வீசினான். அந்த வெடி குண்டு வெடித்து அந்த லான்ஸ் நாயிக்கையும் மற்றொருவரையும் காயப் படுத்திற்று. என்றாலும் அவர் தன் கைத் துப்பாக்கியால், ஜப்பானியரை நோக்கிச் சுட்டார். இருவர் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் தப்பி யோடினர். இவ்வாறாக 15 ஜப்பானியர்களை 3 சென்னைக்காரர்கள் விரட்டி யடித்து விட்டனர்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

ருமேனியாவுக்கு ரஷ்ய உதவி

ரஷ்யப் படைகள் பால்கன் நாடுகளின் மேல் படை யெடுத்து போய் பெரும் வெற்றி பெற்றன. சமயத்திற்கேற்றபடி தாளம் போடும் பல்கேரியா போன்ற நாடுகளை அறவணைத்து யுத்தத்தினின்று விலகிக் கொள்ளும்படிச் செய்து விட்டன. யுத்தத்தின் 5-வது வருஷக் கடைசியில் இவை யெல்லாம் நமக்குப் பெரு மகிழ்ச்சி யூட்டுகின்றன. ருமேனியா, ஜெர்மானியர் கையை விட்டுப் போய் விட்டது என்றே சொல்லலாம். மிகுந்திருக்கும் ஜெர்மானியர்கள் அங்குள்ள எண்ணெய்க் கிணறுகள் உள்ள இடத்தைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோருடைய மனோ பலம் சிதைந்து விட்டது. அவர்கள் தம் போராயுதங்களைத் தூர எறிந்து விடுவதாகத் தெரிகிறது. உக்ரெய்னியப் படைகள் கலடா கணவாய் வழியாக ஜெர்மனிக்குள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அதைவிட முக்கியமானதென்ன வென்றால் ப்ளாயெஸ்டியை நேசப் படைகள் கைப்பற்றி விட்டன.

பல முறை விமானத் தாக்குதல்களுக்கு உள்ளான பெரும் பட்டணம் ப்ளாயெஸ்டி. தோல்வி ஒருபுற மிருக்க, ஜெர்மானியர்களுக்கு மேலும் பெரு நஷ்டம். எப்படி யென்றால், ருமேனியா நேச நாடுகளோடு சேர்ந்து விடுவதென்று முடிவு செய்து விட்டது. அதன் பயனாக, அதை யடுத்துள்ள நாடுகளும் தடமாடத் தலைப்பட்டன. ஆகவே, போராடுவதற்கு மிகவும் இன்றியமையாத பொருளான எண்ணெய் ஜெர்மனிக்குக் கிடைப்பதற்கு வழி யில்லாமற் போய் விட்டது.

போர் இயந்திரத்திற்கு உயிர் போன்றது எண்ணெய்

டச்சு இந்தியத் தீவுகளில் எவ்வளவு எண்ணெய் உற்பத்தியானதோ, அவ்வளவு எண்ணெய், ருமேனியாவிலும் உற்பத்தியானது. யுத்தத்திற்கு முன்னதாக 5 லட்சம் டன் எண்ணெய் அங்கே வருஷந் தோறும் உற்பத்தியானது. விமானத் தாக்குதல்களால் நேர்ந்த சங்கடங்களாலும் நாசங்களாலும் இந்த அளவுக்கு இப்போது எண்ணெய் ஜெர்மனிக்குக் கிடைப்பதில்லை. ஆகவே நிலக்கரியினின்று ஒரு வகை செயற்கை எண்ணெய் உற்பத்தி செய்தார்கள். ஆகையால்தான், செயற்கை எண்ணெய்ச் சுத்தி செய்யப்படும் தொழிற்சாலைகள் மீது குண்டுகள் வீசப்படுவதாக நாள்தோறும் கேள்விப்படுகிறோம். ஏனென்றால், போர் இயந்திரத்திற்கு எண்ணெய் தான் உயிர் போன்றது. எண்ணெயில்லா விட்டால், போர் நடவாது. ஜெர்மனியைப் பலவீனப் படுத்தவேண்டுமானால், ஜெர்மன் படைகளைக் கைப்பற்றவோ, கொல்லவோ வேண்டிய அவசியமில்லை. தடைகள் போடுவதாலும் வெடிகுண்டுகள் வீசுவதாலுமே இந்தக் காரியம் நடந்து விடுகிறது. சென்ற பல வாரங்களாக நாம் கேள்விப்படும் பெரும் விமானத் தாக்குதல்களெல்லாம், எதிரிக்கு எண்ணெய் கிடைக்காமற் செய்யும் பொருட்டுத் தான். ஜெர்மானியர் வசமிருந்த எண்ணெய் செலவாகிவிட்டது. ஆகவேதான், ருமேனியாவும் எண்ணெய் உற்பத்தியாகும் மற்ற நாடுகளும் முக்கியமானவையாகி விட்டன. எதிரி வசமுள்ள எண்ணெய்ப் பகுதிகள் சதா தாக்கப்பட்டு வருகின்றன. ஆகவே தான், சுமாத்ரா தீவின் துறைமுகங்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றன. இந்த வாரம் தாக்கப்பட்ட துறைமுகங்களிலொன்று தான் படாங். ஜப்பானுக்கு வேண்டிய எண்ணெய் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து கடல் வழியாகக் கொண்டு போகப்பட வேண்டியிருக்கிறது. துறைமுகங்களும் இறங்கு துறைகளும் நாசஞ் செய்யப்பட்டால், எண்ணெய் வெளியேற்றப்படுவதற்கு முடியாமற் போகிறது. அப்போது யுத்தமே நின்றுவிட்டதற்குச் சமானந் தான். டச்சு இந்தியத் தீவுகளிலும், பர்மாவிலும், போர்னியோவிலும் மிஞ்சி யிருக்கும் எண்ணெய்க் கிணறுகள் ஜப்பானுக்குச் சொந்தமானவையா யிருக்கலாம். ஆனால், தேவையான இடத்திற்கு எண்ணெயை ஏற்றி யனுப்ப முடியாவிட்டால், அதனால் என்ன பயன்?

கீழ் நாட்டு விடுதலை நாள் நெருங்குகிறது

கீழ் நாட்டுக் கப்பற்படைத் தலைவராகப் புதிதாக நியமிக்கப்பட்ட சர் ப்ரூஸ் ப்ரேஸர் வந்து சேர்ந்துவிட்டார். அதே சமயம், லார்ட் லூயி மௌண்ட் பேட்டனும் லண்டனுக்குச் சென்று திரும்பி வந்து சேர்ந்தார். இந்த இரு செய்திகளும் ஜப்பானியரைத் திகைக்க வைக்கக் கூடியவை. கீழ் நாடுகளின் மீட்சி நாள் நெருங்க ஒட்டாதபடி தடுக்க வேண்டி ஜப்பானியர்கள் பெரும் ஆயத்தங்கள் செய்து கொண்டு தானிருப்பார்கள். ஐரோப்பிய யுத்தச் செய்திகள் அவ்வளவு முக்கியமானவையா யில்லாவிட்டால், பர்மிய போர்ச் செய்தி தான் உலகத்திலே மிகவும் முக்கியமானவையா யிருக்கும். ஐரோப்பிய யுத்தம் முடிவடையும் போது, பர்மியப் போர்ச் செய்திகள் பத்திரிகைகளில் கொட்டை யெழுத்துக்களில் வெளியிடப்படும். உலக மக்கள் அனைவருடைய கவனமும் பர்மா மீதும், போர்த்தளமான இந்தியா மீதுமே, பதிந்திருக்கும். சென்ற மாதம் சீனர்கள் ஒரு நாளைக் கொண்டாடினார்கள். அது ஜப்பானியரோடு யுத்தம் ஆரம்பமாகி 7 வருஷங்களும் 7 மாதங்களும் 7 நாட்களும் கடந்ததைக் குறிப்பிட்டது. அப்போது, சீன மக்களைப் பாராட்டி நமது முதன் மந்திரி ஜெனரலாஸிமோ ஷியாங்-கெய்-ஷேக்குக்கு ஒரு செய்தி விடுத்தார். அதில், "நமது முழு பலத்தையுங் கொண்டு ஜப்பானைத் தாக்குவோம் என்று கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். சற்று பொறுத்து வெடிக்கும் வெடி குண்டின்மேலே உட்கார்ந்திருப்பதுபோல் இருக்கிறது ஜப்பானுடைய நிலைமை. இந்த அகம்பாவங் கொண்ட மக்கள், உண்மையிலேயே வெறுக்கப்படத் தக்க நிலையில் தாம் இருப்பதை உணரத் தலைப்பட்டு விட்டார்கள்.

முழு பலம்

"நேச நாடுகள் ஐரோப்பாவில், தம் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்; ஆகவே இந்தத் தலை சிறந்த சந்தர்ப்பத்தைத் தக்கபடி பயன் படுத்திக் கொள்ள வேண்டு" மென்று சிங்கப்பூர் வானொலி நிலையம் ஜூன் மாதம் 8-ம் தேதி கூறி

பது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் குவாமையும் சைபானையும் ஜப்பான் இழந்தது! மத்திய பசிபிக்கில், 3,700 மைல் தூரம் மூவகை நேசப படைகளும் கடந்து ஜப்பானுக் கருகில் வரும்படி அனுமதித்தது! "நமது முழு பலம்" என்று கூறிய சர்ச்சில், முழு பலத்தையுங் கொண்டு தாக்கத் தான் போகிறார். அந்த பலம் இப்போது ஐரோப்பாவில் எவ்வளவு கடுமையாகக் கையாளப்பட்டு பெரும் புகழடைகிறதென்று இப்போது தெரிகிறது. இந்தப் பெரும் படைகள் தான் இப்போது பிரான்சிலும், இத்தாலியிலும், ஹிட்லர் வயப்பட்ட ஐரோப்பிய நாடுகளோடும் போராடிக் கொண்டிருக்கின்றன. சிறைக் காவலாளிக்கே ஒரு சிறைக்கூடமாக இப்போது ஐரோப்பா மாறிவிட்டது. இதைப் பற்றித்தான் இப்போது ஹிட்லர் கவலைப் படுவதெல்லாம். அங்கிருந்து அவர் அடியோடு விரட்டப் படுவார். அவர் எங்கு வேண்டுமானும் ஒளிந்து கொள்ளட்டும்.

இதற்குள், தம்மிடம் உபரியா யிருக்கும் படைகளைக் கொண்டு, ஜப்பானியர்கள் வெகு விரைவாகப் பிடித்து, வெகு விரைவாக இழந்த நாடுகளில், ஆயிரக் கணக்கான மைல் தூரம் நேசப் படைகள் மீட்டு விட்டன. 1943-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி மிஸ்டர் சர்ச்சில் கொடுத்த வாக்குறுதியை பிரிட்டன் நிறைவேற்றும் காலம் நெருங்கி விட்டது. அந்த வாக்குறுதியாவது :—

"மன்னருடைய சேவகத்தி லிருக்கும் ஒவ்வொருவரும், ஒவ்வொரு கப்பலும், ஒவ்வொரு விமானமும் கூடுமானுல், பசிபிக் போர்முனைக்கு அனுப்பப் படும். அவற்றின் போர்ச் செலவை பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மக்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள். மற்ற வேலைகளெல்லாம் இதற்குப் பிற்பட்டவை தான். ஜப்பானியர்கள் அடிபணிய வேண்டும்; அல்லது மண்ணைக் கவ்வ வேண்டும். இதற்கு எத்தனை வருஷங்களானுலும், அது வரை, இந்த படைகள் போராடிக் கொண்டு தான் இருக்கும்."

நிற்க, அமெரிக்கப் படைகள் குவாமைக் கைப் பற்றியது பற்றி, நமது மன்னர் பிரான் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு அனுப்பியிருக்கும் வாழ்த்துச் செய்தியில்,

"ஜப்பான் அடியோடு முறியடிக்கப் படும் என்பதற்கு இது மிகச் சிறந்த அறிகுறி; இதன் பொருட்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும் பெருவாரியாகத் தம் படை பலத்தைக் கொண்டு உதவும்."

என்று குறிப்பிட்டிருக்கின்றார். இனி ஜப்பானியர் ஒரு நாளும் கண்டிராத வாண வேடிக்கைகளைக் காணப்போகிறார்கள்.

பிரான்சும் லவால் மாயமும்.

பிரான்சு போராட்டம் பாதி முடிந்து விட்டதென்று சொல்லலாம். பிரான்சின் பெரும் பகுதிகளில் ஜெர்மானியர்கள் கூட்டங் கூட்டமாக அழிக்கப் படுகிறார்கள். பாரிஸ் நகரம் மீட்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்ட பொழுது, உண்மையிலேயே மீட்கப்பட வில்லை. ஏனென்றால், அதற்குப் பிறகு ஜெனரல் அய்சினேவர் உண்மை நிலையை விளக்கிக்கூறியிருக்கிறார். அதாவது பிரஞ்சுப் படையினருக்கும் அங்கிருந்த ஜெர்மன் படைத் தலைவருக்கும் நடந்த உடன்படிக்கைப்படி ஜெர்மானியர்கள் சரணடைந்திருக்க வேண்டும். சரணடைவார்கள் என்று எதிர்பார்த்துத் தான் பாரீஸ் பிடிபட்டு விட்டதாக முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனுல் ஜெர்மானியர்களோ ஒப்பந்தத்தை நிராகரித்துப் போரிட்டனர். ஆகவே, தான், நேசப் படைகளும் தம் பெரும் படை பலத்தைக் கொண்டு போராட வேண்டி வந்தது. ஆனுல் பிரான்சில் இன்னும் 5-ம் படையினர் இருப்பதாகத் தெரிகிறது. சென்ற 4 வருஷங்களாக நாஜிகளோடு கூட்டுறவு கொண்டிருந்த அந்நாட்டில் இது சகஜந் தான்.

டிகால்

ஜெனரல் டிகாலைக் கொல்ல கேவலமான முறையில் முயற்சித்தனர். நல்ல வேளையாக அம்முயற்சி பலிக்க வில்லை. அன்றியும் பாரீசின் பிற இடங்களிலும் துப்பாக்கி வெடிகள் கிளம்பின. இவற்றினின்று, நேசப் படையினர் எவ்வளவு எச்சரிக்கை யோடிருக்க வேண்டு மென்றும், ஐரோப்பாவினின்று இந்த துராத்மாக்களை விரட்டி யடிக்க எவ்வளவு காலம் செல்லு மென்றும் விளங்குகிறது.

பியர் லவால் ஒரு அருவருக்கத் தக்க ஜன்மம். அவருடைய மாயா வினோதங்கள் பல. இவர் தான் பிரான்சு நாட்டைக் காட்டிக் கொடுத்தவர். அவருடைய தோற்றம் எவ்வளவு அருவருக்கத் தக்கதாக விருக்கிறதோ, அது போலவேதான் அவருடைய வேலையும் அருவருக்கத் தக்கதா யிருக்கிறது. அவரை ஜெர்மானியர்கள் கைது செய்ததாக வெளி வந்த செய்தி உண்மையானுல், அவரை ஏன் கைது செய்தார்கள்? அவருடைய கையாளும் கூட்டாளியுமான டீட் கூட ஏன் அவரைக் குறைகூற வேண்டும். இந்த மாயா வினோதம் ஒன்றும் நமக்குப் புரிய வில்லை. லவால் பெரிதும் திருந்தி விட்டா ரென்றும், பிரான்சு மீதும் பிரான்சு மக்கள் மீதும், நேச நாடுகளின் மீதும் அன்பு கனிந்து விட்டதென்றும் நாம் நம்ப வேண்டு மென்று நாஜிகள் செய்த சூழ்ச்சியாக விருந்தாலு மிருக்கலாம். அவரைக் கைது செயதவர்கள் அவரை நன்ருகக் கொழுக்க வைத்து நேச நாட்டினர் வசம் ஒப்புக் கொடுத்தாலும் நல்லது தான். இதற்கிடையில் பாரீசினின்று நேசப் படைகள் கிழக்கிலும் வடக்கிலும் பரிந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றன. மீதியுள்ள நேசப் படைகள் ஜெர்மன் 19-ம் படையினரை கடுமையாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. இதைத் தாங்கமாட்டாமல், தம் ஆயுதங்களையும் இழந்து விட்டு சீன் ஆற்றின் கீழ் பாகத்திருப்பு பின் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் ஜெர்மானியர்கள்.

நல்ல வேளை நெருங்கி விட்டது.

தெற்கு பிரான்சிலிருந்து மற்ருெரு ஜெர்மன் படை மகா கோபத்தோடு ரோன் பள்ளத்தாக்கி லிருந்து விரைந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதே சமயத்தில், க்ரினேபிலிலிருந்து ஒரு நேசப படையும் அவிக்னனிலிருந்து மற்ருெரு நேசப் படையும் அதைத் தொடர்ந்து போகின்றன. நமக்குக் கிடைத்திருக்கிற செயதி உண்மையானுல், லியானில் சுயேச்சைப் படையினரை அவர்கள் சந்தித்துப் போரிட வேண்டி நேரும். லியன் நகரத்தை மீட்டவர்கள் இந்த சுயேச்சைப் படையினர் தான். இந்த வாரம் ப்ரெஸ்டை நேசப் படைகள் மறந்து விடவில்லை. அடுத்த படியாக ப்ரெஸ்ட் தான பிடிபடும். இந்த வெற்றிப படைகள் திட்டப்படி முன்னேறிக் கொண்டிருக்கும் போது, ஜெர்மன் படைகள் தம் போர்த் தந்திர முறைகளை கொட்டி, பின் வாங்கிக் கொண்டிருக்கட்டும்! ஜெர்மனிக்கே ஓய்வு ஒழிவென்பதில்லை; குறிபபாக போக்கு வரவுப்பாதை

கள், ரயில் சாமான் வண்டிகள், ரோடுகள், பாலங்கள் இறங்கு துறைகள், கடலில் கிளம்பக்கூடிய சில கப்பல்கள் ஆகியவற்றிற்கு ஒய்வென்பதே கிடையாது. கெய்ல், கோனிக்ஸ்பர்க் முதலிய துறைமுகங்களில் தகுந்தபடி நாம் நகாஸ் வேலைகள் செய்து விட்டோம். ஜெர்மனியின் மற்ற சில துறைமுகங்களிலும் கூட அப்படித் தான் செய்திருக்கிறோம். ஆகவே, செம்படைகள் பார்ல்டிக் பிரதேசத்தை நோக்கி முன்னேறும் போது, அவர்கள் சில ஜெர்மன் ஜெனரல்களையும் ஆயிரக் கணக்கான படையினரையும் கைதிகளாகப் பிடிப்பதற்குச் சந்தர்ப்பங் கொடுத்ததாகும்.

சர்ச்சில் லண்டன் திரும்பினார்.

இத்தாலியிலும் நிலைமை மும்முரமாகிக் கொண்டிருக்கிறது. தாம் காதிக் அரணில் புகலிடங் கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டதென்று ஜெர்மானியர்கள் முடிவு கட்டி விட்டார்கள். ஒரு போதும் தோற்றறியாத 8-ம் படை, தன் கண்ணியத்தை நிலை நாட்டிக் கொண்டு வருகிறது. சிற்சில மைல் தூரமாகிலும் முன்னேறிக் கொண்டு தான் இருக்கிறார்கள். வட்ரியாடிக் கடற்கரைப் பகுதிகளில் மலைகள் அதிகம் கிடையாது அங்கெல்லாம் வெகுவாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

முடித்துவிட்டு நிம்மதியாக லண்டனுக்குத் திரும்பினார். அடுத்த பெரிய வேலையொன்றை யவர் மேற்கொண்டிருக்கிறார். இந்த வேலைகளைச் செய்ய எங்கிருந்து தான் அவருக்குப் பலம் கிடைக்கிறதோ தெரியவில்லை! அதுதான் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுடன் சந்திப்பு. இது வாஷிங்டனில் நடைபெறும், உலகப் பாதுகாப்பு மகா நாடு முடிந்த பிறகு, ஏற்படலாம். அங்கே யுத்தத்திற்கு உடனடியாகத் தேவையான விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்கள் விவாதிக்கப்படலாம் தான். 1940-ம் வருஷம் பதவி ஏற்றது முதல் இது வரை நிகழ்ந்துள்ளவை பற்றி அவர் தன்னைத்தான் பாராட்டிக் கொள்ளலாம்.



சமீபத்தில் பிடிபட்ட டோலான் நகரம்.



பிரான்சின் 2-வது நகரமான மார்செய்ல்சும் பிடிபட்டது.

ரவீரா கடற்கரையினின்று ஜெர்மானியர் அடியோடு விரட்டப்பட்டு விட்டனர். டோலான் தளம் மீட்கப் பட்டுவிட்டது. பிரான்சின் இரண்டாவது நகரமான மார்செய்ல்ஸ் நமது வசமாகி விட்டது. இனி வடக்கே யுள்ள ஜெர்மன் படைகளைப் பெருவாரியாகத் தாக்குவதில் நேசப்படைகள் முனையலாம். இது எளிதில் நடைபெறக்கூடிய வேலைதான்.

சென்ற சில வாரங்களாக இத்தாலியில் பல சந்திப்புக்கள் நடந்தன. அப்போதெல்லாம் சர்ச்சில் முக்கியமான பங்கு கொண்டிருந்தார். யூகோஸ்லாவியப் பிரதிநிதிகளில் முக்கியமானவர்களோடு கலந்து பேசினார். கிரேக்கப் பிரதிநிதிகள் இத்தாலியப் பிரதிநிதிகளோடும் போப்புடனும் கலந்து பேசினார். தான் மேற்கொண்ட வேலையைச் செம்மையாக ஆச்சரியப் படத்தக்கபடி இக்கடும்பணியை அவர் மேற்கொண்டு நடத்துகிறார். அவர் விருப்பப்படி அவ்வேலை முடியும் என்பது பற்றி நாம் நம்பிக்கை யோடிருக்கலாம்.

வானொலி நாட் குறிப்புக்கள்

1—9—44	சென்னை	—மாலை	7-00	மணிக்கு—	"ஒற்றுமைப்பு வேண்டும்"—"செலவில் சிக்கனம்"—மிஸ்டர் டி. ஜி. தாமோதர முதலியார்.
2—9—44	திருச்சி	ஷி	7-15	ஷி	"உழவன் முன்னேற்றம்"—"விஞ்ஞான சகாயம்"—மிஸ்டர் எ. கே. ரகுநாதன்.
3—9—44	ஷி	ஷி	ஷி	ஷி	"வெற்றிக்கு முன்னேற்றம்"—கான் பகதூர் பி. கலிபுல்லா சாயபு பகதூர்.
5—9—44	ஷி	ஷி	ஷி	ஷி	"நாமும் யுத்தமும்".
ஷி	சென்னை	ஷி	7-00	ஷி	"யுத்த விமர்சனம்"—மிஸ்டர் வெங்கடராஜுலு நாயுடு.
6—9—44	திருச்சி	ஷி	7-15	ஷி	"அச்சுக் குரல்"—ரெவரண்ட் பாதர் எல். எம். பாலம், எஸ். ஜே.

வீரனுக்கு நெருப்பு ஒரு எதிர்ப்பா?

இத்தாலியில் ஓர்சக்னா என்னுமிடத்திற் கருகில் கடும் போர் நடந்தது. 8-வது பஞ்சாப் படையைச் சேர்ந்த லான்ஸ் நாயிக் கர்ட்டார் சிங் தன் ஆட்களோடு எதிரி குண்டுகள் நெருப்பை கக்கிக் கொண்டிருப்பதையும் பொருட்படுத்தாது, மார்பினால் நகர்ந்து முன்னேறி, காயப் பட்டவர்களை மீட்டார். தாம் இன்ன படையைச் சேர்ந்தவர்கள் என்பது எதிரிக்குத் தெரிந்து விடக் கூடாது என்பது தான் அவருடைய நோக்கம். அந்த வீரருக்கு இராணுவப் பதக்கம் அளிக்கப்பட்டது மிகவும் பொருத்தந் தானே?

திடீர்ச் செய்திகள்

கற்பனை வேகத்தையும் தோற்கடிக்கும்படி, யுத்த ஆரம்பத்தில் ஜெர்மானியர் பல வெற்றிகளைச் சம்பாதித்து, அது சம்பந்தமான செய்திகளைப் பரப்பிக் கொண்டிருந்தனர். பிரான்ஸ் போச்சு; பெல்ஜியம் போச்சு; ஹாலந்து, டென்மார்க் வீழ்ந்தன; டங்கர்க்கில் நேசப் படைகள் தப்பினோம், பிழைத்தோம் என்று கப்பலேறி ஓடின; நார்வே காலி; ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி எல்லாம் நாஸிகள் கையில்; கிரீஸ் மீது இத்தாலியின் பாய்ச்சல், ஜெர்மனியின் உதவி; ருஷ்யா மீது ஜெர்மன் படையெடுப்பு, ஒரு மாதத்திற்குள் யூக்ரேன் எல்லாம் கடந்து கிழக்கே போய்விட்டது; இம்மாதிரியான செய்திகள் பத்திரிகைகளில் வந்த போது, உலகோர் பிரமித்திருப்பர். இத்தகைய திடீர்ச் செய்திகள் எப்பொழுது வெளியானாலும் யாராக இருந்தாலும் திகைத்தே தான் போவார்கள். அதில் சந்தேகமேயில்லை. முன்பு எவ்வளவு வேகத்தில் ஜெர்மானியர் தங்கள் கட்சிக்கு வெற்றிகளைச் சம்பாதித்தார்களோ, அதே வேகத்தில் இப்பொழுது நேச தேசத்தினர் வெற்றிகளடைந்து வருகிறார்கள். எதிர்பாராத, அத்யாச்சரியமான சம்பவங்கள் எல்லாம் நடக்கின்றன.

பின்னேற்றம்.

நேச தேசத்தார் இரண்டாவது போர் முனையை ஆரம்பித்து வைத்தார்களா? நேசப் படைகளை சமுத்திரக் கரையருகிலேயே நிறுத்தி வைத்துவிட வேண்டுமென நாஸிகள் எவ்வளவோ முயன்றார்கள். வெறி பிடித்தவர்கள் போலப் போராடினார்கள். ஆனால், துறைமுகங்களில் சில, நேசப் படைகள் வசம் சிக்கியது காரணமாக, மேற்கொண்டு ஏராளமான படைகளும், டாங்கிகளும், பீரங்கிகளும், மோட்டார்களும் வந்து குவிந்து விட்டன. அதோடு விமானப் படை பெரும் போடு போட்டது. ஆகவே நாஸிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டனர்.

ஜெர்மானியர் 1940-ல் என்ன செய்தார்கள்? திடீரென்று, நேசப் படையைச் சூழ்ந்து கொள்ள முயன்றார்கள். உடனே நேசப்படை டங்கர்க் துறைமுக வழியே பெருஞ் சேதத்தோடு சீமைக்குத் தப்பி ஓடிற்று. அதே கதை இப்பொழுது திரும்பி நடந்து விட்டது. இம்முறை நாஸிகள் மாட்டிக் கொண்டனர். அமெரிக்க, கன்னடியப் படைகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டன. சுமார் அரை லட்சம் நாஸிகள் கதி, அதோ கதியாகி விட்டது.

இடிந்தனர் நாஸிகள்.

இந்தத் தோல்வியை எண்ணி நாஸித் தலைவர்கள் இடிந்து போய் விட்டார்கள். அவர்கள், பிரமித்து நிற்கையிலேயே, அமெரிக்கப் படைகள் சூர்பாணம் போல் குபீரென்று முன்னேக்கிப் பாய்ந்து பாரிஸ் நகர் எல்லையை அடைந்து விட்டனர்.

அவர்கள் சமீபத்தில் வந்து விட்டார்கள் என்பதை அறிந்ததும், பாரிஸிற்குள் இருந்த பிரஞ்சு மக்கள், முந்நாளில் புரட்சி செய்ததுபோல் இப்பொழுதும் துள்ளி எழுந்தனர். கையிலே கிடைத்தவற்றை யெல்லாம் ஆயுதங்களாக உபயோகித்தனர். பிரஞ்சு போலீஸார், பிரஞ்சு மாதர், பிரஞ்சு மக்கள் எல்லாம் சேர்ந்து, அங்கங்கே உள்ள நாஸிகளை சட்ணியாக்கினர்.

பாரிஸ் விடுதலை.

நான்கு நாட்கள் பாரிஸிற்குள்ளாகவே கலகமும், கலாட்டாவும் நடந்திருக்கின்றன. முடிவிலே பிரஞ்சு மக்கள் வெற்றி பெற்று விட்டனர். நாஸிகள் அலங்கோலமாக நகரை விட்டு வெளியே ஓடினர். பாரிஸ் நகருக்கு நடுவிலே ஓடும் நதிப் பாலங்களை அழிக்கக் கூட அவர்களுக்கு அவகாசமில்லை. தெருக்களில் பல ஜெர்மன் சவங்கள் கிடந்தனவாம்.

இந்தச் சமயத்தில் சுதந்திர பிரஞ்சுத் தலைவர் டிகாலின் தலைமையில் பிரஞ்சுப் படைகளும், மற்றப் படைகளும் பாரிஸிற்குள் புகுந்து விட்டன. அப்படைகளுக்குப் பிரமாதமான வரவேற்பு நடந்ததாம். அதை சௌகரியமான இடங்களில் இருந்து பார்க்க, பலர் ஏராளமான பணம் கொடுத்தார்களாம். பிரஞ்சு மக்களின் ஆனந்தம் அளவு கடந்து விட்டதாம். அந்த வேளையில் சில நாஸிகள் டிகாலை நோக்கிச் சுட்டார்களாம். டிகாலுக்கு ஆபத்து ஏதும் ஏற்படவில்லை. நாஸிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் போர் மூண்டதாம். அதுபாட்டுக்கு ஒரு பக்கம், வரவேற்புக் கொண்டாட்டம் பாட்டுக்கு ஒரு பக்கம்.

வேறு வழியின்றி, பாரிஸிலிருந்த ஜெர்மன் சேனாதிபதி பிரஞ்சு மக்களிடம் சரணடைந்து விட்டாராம். அதோடு அவர் அங்கு மிங்கும் சென்று தமது படையினரை சும்மா இருக்கச் சொன்னாராம். இந்தத் தகவல் எட்டாததால் சில நாஸிகள் விடாது போராடிக் கொண்டிருந்தார்களாம்.

நாஸிகள் ஆத்திரம்.

ஜெர்மானியருக்கு ரொம்ப ஆத்திரம். பாரிஸ் நகரம் பறி போனதிலே அவர்களுக்குப் பலமான அடி விழுந்ததுபோலல்லவா? ஆகவே, அவர்கள் பாரிஸ் நகர் மீது வெடிகுண்டு வீசவும் தயங்கவில்லை. அவர்களே பாரிஸ் நகரைப் பாதுகாப்பாற்ற நகரமென அறிவித்துவிட்டு, இப்பொழுது குண்டு வீசுகிறார்கள். இது அயோக்கியத் தனமல்லவா?

பாரிஸ் நகரம் விழுந்தது, நார்மண்டியிலே நேசப்படைகள் இறங்கி பதினொரு வாரங்களுக் கப்புறம். இப்பொழுது பாரிஸ் நகரிலே டிகால் மட்டுமின்றி, ஜெனரல் ஐஸன்ஹோவரும் இருக்கிறார். ரொம்பத் துணிச்சல்காரர்கள் தான் இவர்கள். ஜெர்மனி நொண்டியாகி விட்டது என்பது நிச்சயமாகி விட்டதால் தான் இந்தத் தைரியம் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஒன்றன் பின் ஒன்று.

இத்தாலிக்குத் தலை நகரம் ரோமாபுரி. அதை இழந்தார்கள் நாஸிகள். இப்பொழுது பிரான்ஸின் தலைநகரை அவர்கள் இழந்திருக்கிறார்கள். ருமேனியாவின் தலைநகரம் அவர்களது கைவசமில்லை. போலந்தின் தலைநகரம் பற்றி எரிகிறது. அதுவும் நாஸிகள் கையில் இல்லை. கிழக்கு பிரஷ்யாவின் தலைநகர் மீது ருஷ்யர்கள் கண் போட்டிருக்கிறார்கள். பிரான்ஸ தலைதூக்கி விட்டது. ருமேனியாவும் வெகு தைரியத்தோடு ஜெர்மனியின் சிநேகத்தை விட்டு, அதன் மீது போர் தொடுக்கவும் துணிந்துவிட்டது.

ருமேனியாவை ஹிட்லர் இழந்ததுபோல் தான். அதோடு ஜெர்மனியின் உயிர் நிலைகளில் ஒன்று பறி போனது போலாகிறது. உயிர் நிலை என்றால் சாதாரணமானதல்ல. இந்த யுத்தம் நடப்பதற்கு அத்யாவசியமானது பெட்ரோல். அது ருமேனியாவில் உள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து ஜெர்மனிக்கு நிறையக் கிடைத்துக் கொண்டிருந்தது. இப்பொழுது அதற்கு ஆபத்து வந்து விட்டது.

மாட்டிக் கொண்டார்கள்.

இதோடு, திடீரென்று ருமேனியா குட்டிக் கரணம் போட்டு, 'தூக்குடா கையை!' என்று போராடத் தொடங்கியதால், நாஸிகள் வெல வெலத்துப் போய் விட்டார்கள். தப்பி ஓடவும் அவர்களுக்கு அவகாசமில்லை. பெரியதொரு நாஸிப் படை அங்கு மாட்டிக் கொண்டது.

இந்த வேளையில் ருஷ்யர்கள் ருமேனியாவிற்குள் புகுந்து பெரிய பெரிய நகரங்களைக் கைப்பற்றி விட்டனர். அவர்களுடன் ருமேனியர்கள் சேர்ந்து, முன்பு ஹங்கேரிக்குப் பறி கொடுத்த டிரான்ஸில்வேனியாவிற்குள் நுழைந்தனர். ருஷ்யக் குதிரைப் படை ஒன்று கார்ப்பேதிய மலைக்கணவாய்கள் வழியாக ஹங்கேரிக்குள் புகுந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

'சும்மா இருப்பதே சுகம்'.

இதுதான் சமயமென்று பார்த்து, பல்கேரியா, 'சும்மா இருப்பதே சுகம்' என்ற கொள்கையைக் கடைப் பிடிக்கத் தீர்மானித்திருக்கிறது. அந்நாட்டிற்குள் நுழையும் அந்நியர்களின் ஆயுதங்களை பல்கேரியர்கள் பிடுங்கிக் கொள்ளுகிறார்கள். ஹங்கேரியாவும் வெகு நாட்கள் நாஸிகள் பக்கம் இருக்க முடியாது.

அடுத்த படியாக யூகோஸ்லேவியா, ஸிகோஸ்லேவியா, கிரீஸ், ஆல்பேனியா ஆகிய நாடுகள் தங்கள் சுய ரூபத்தைக் காட்ட முயலலாம். ஜெர்மனியின் பலத்திற்குப் பயந்தே அவையனைத்தும் இத்தனை காலம் சும்மா அடங்கிக் கிடந்தன. நாஸிகள் நமது நாடுகளைச் சுரண்டுகிறார்களே என்று அந்தந்த நாட்டு மக்கள் மனக்கொதிப்புடன் இருந்திருக்க மாட்டார்களா? பழிக்குப்பழி வாங்க அவர்கள் சமயம் பார்த்திருக்க மாட்டார்களா?

யானை பழி தீர்த்த செய்தி.

போன வாரம் கூட பத்திரிகைகளில் ஒரு சம்பவம் வெளியாகி யிருந்ததே,

பார்த்தீர்களா ? ஒரு யானையாம். பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னே யாரோ ஒருவர் அதன்மீது கல்லெறிந்து, பலமாகக் காயப்படுத்தி விட்டாராம். அது முதலே அந்த யானைக்கு உள்ளூர ரொம்பக் கோபமாம். யாராவது குனிந்து கல்லை எடுத்தால் போதும், அது வீரிட்டலறி, ஏக கலாட்டா செய்யுமாம். ஓரிரண்டு தடவைகளில் கட்டுக் கடங்காமலும் அது போயிருக்கிறதாம். அப்புறம் பல மாவுத்தர்கள் கூடி அதனை அடக்கி வைத்திருந்தார்களாம். போன வாரம் ஒரு நாள், அதனுடைய மாவுத்தன் அதனருகே நின்று கொண்டிருக்கையில் ஒரு முரட்டு எருமை அங்கே ஓடி வந்ததாம். அதைத் துரத்தவேண்டி, அந்த மாவுத்தன் ஒரு கல்லைக் குனிந்து எடுக்கப் போனானாம். உடனே அந்த யானை ஆத்திரங்கொண்டு, தன்னைத் தான் அவன் அக்கல்லால் அடிக்கப் போகிறான் என எண்ணி, அவனை அப்படியே தும்பிக்கையால் தூக்கி, தரையிலடித்து, காலுக்கடியில் வைத்து மிதித்து, தனது வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டதாம். அது போல அடிபட்டு, இடிபட்டுக் கிடக்கும் நாட்டு மக்கள் உள்ளூரக் குமுறிக்கொண்டு தானிருப்பார்கள். சமயம் வந்தால், எதிரியை நசுக்கித் தொலைத்து விடுவார்கள்.

ருமேனியாவில் நாடகம்

ருமேனியாவிலே ஐந்து நாட்கள் நடந்த சண்டையிலேயே ஒரு லக்ஷம் நாஸிகள் கோவிந்தா ஆகி விட்டார்களாம். இன்னொரு லக்ஷம் கைதிகளாகி விட்டார்களாம். ருமேனியாவிலே, ஹிட்லரின் கையாளாக இருந்த அன்டனஸ்கு என்பவர் 'அரெஸ்ட்' செய்யப்பட்டு விட்டார். அந்நாட்டு மன்னர் ருஷ்யரின் ஆதரவைப் பெற்று, தமது பழைய அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டார்.

இழந்த முடிகள்

லண்டனிலே, பல முடியிழந்த மன்னர்கள் நான்கைந்து வருட காலமாக, நேச தேசத்தாரின் பலத்திலே பூரண நம்பிக்கைகொண்டு, தங்களது இழந்த முடிகள் திரும்பவும் தங்கள் தலைக்கு வரும் என்ற உறுதியுடன் இருந்து வருகிறார்கள். அவர்களில் ஒவ்வொருவருக்காகப் புனர் பட்டாபிஷேகம் நடக்கக் கூடிய காலம் வந்து கொண்டிருக்கிறது. ஜெர்மனியை மீண்டும் தலை தூக்காமல், அந்த நாட்டிற்குள்ளேயே புகுந்து அடித்து அடக்கி ஒடுக்க நேச நாட்டவர் தீர்மானித்து விட்டார்கள்.

அமெரிக்கப் படைகள் மேற்குத் திசையில், ஜெர்மன் எல்லைக்கு நூறு மைல்களுக்குச் சிறிது அதிகமான தூரத்தில் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன. ருஷ்யர்கள் எந்தச் சமயத்திலும் கீழ்த் திசையில் ஜெர்மனிக்குள் புகலாம். அங்கு ருமேனிய நாடகம் போல இன்னும் பல திடீர் மாறுதல்கள் ஏற்படலாம்.

மனம் கல்லாகிறது

ஏதோ பழிக்குப் பழி வாங்க, ஆளில்லாது பறக்கும் வெடி விமானங்களை லண்டன் மீது ஏவுவதாக ஹிட்லர் சொல்லிக் கொண்டிருக்கிறார். அந்த விமானங்கள் கடும் சேதத்தை லண்டனிலே விளைவித்தது என்னமோ வாஸ்தவம் தான். ஆனால், இதனால் எல்லாம் பிரிட்டிஷ் மக்களின் மனோ திடத்தைக் குலைக்க முடியுமா என்ன ? அவர்களது மனம் இன்னும் கல்லாக இறுகிக் கொண்டிருக்கிறது. ஹிட்லரையும் அவரது சகாக்களையும் அவர் விதைத்த நாஸிஸக் கொள்கையையும் வேரோடு பிடுங்கி எறிந்து சீக்கிரமே அழிக்க வேண்டுமெனும் ஆத்திரம் தான் பிரிட்டிஷ் மக்களுக்கு எழுகிறது. தங்களது குழந்தை குட்டிகளையும், வீடுவாசல்களையும் பாழாக்கும் ஜெர்மனியின் ரகசிய ஆயுத நிலையங்களைக் கைப்பற்ற ஒரு பிரிட்டிஷ் படை பிரஞ்சுக் கடற்கரையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரமே அந்த நிலையங்களை பிரிட்டிஷ் வீரர்கள் பிடித்து விடக்கூடும்.

நம்பிக்கையிலே மண்

ஹிட்லர் தமது நீர்மூழ்கிகள் மீதும் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தார். அந்த நம்பிக்கையிலும் மண் விழுந்து வருகிறது. நீர்மூழ்கிகள் தங்குவதற்கென்று பல துறைமுகங்களில் அதி பலமான பதுங்கு மிடங்களை சிமிட்டி, கான்க்ரீட், கம்பிகள் எல்லாம் உபயோகித்துக் கட்டச் செய்திருந்தார். அந்தத் துறைமுகங்கள் எல்லாம் அநேகமாக நேசப் படைகள் வசம் வந்து விட்டன. சில பாழாக்கப் பட்டு விட்டன. பதுங்கு மிடமின்றி பட்டவர்த்தனமாக அவை வெளியிலே இருக்க முடியுமா என்ன ? நேச தேசத்தாரின் விமான பலம் அளவு மீறி உயர்ந்து விட்டது. ஆகவே, ஜெர்மன் ஈ, யு படகுகளின் கொட்ட மெல்லாம் அநேகமாக அடங்கி விட்டது. இனி அவை நார்வேக்கு ஓட வேண்டும். அங்கும் நேசப் படைகள் போயிறங்கா என்பது என்ன நிச்சயம் ?

அசல் ஜெர்மனியில் போர் என்றால் ?

அசல் ஜெர்மனிக்குள் போர் தொடங்கினால், அடுத்தாப்போல உள்ள நாடுகளுக்குக் கொஞ்சம் தைரியம் வராதா என்ன? நன்றாக இருந்த தோட்டக்காரன் நொண்டியாகி விட்டான் என்று தெரிந்தால், தோட்டத்திற்குள்ளே துணிந்து நுழைய மாட்டார்களா வெளியாட்கள் ?

கூண்டோடு கைலாசம்

நேசதேசத்தார் டெற்றானில் போட்ட திட்டங்கள் எல்லாம் வெகு ஜோராக அமுல் படுத்தப்பட்டு வருகின்றன. ஜெர்மன் படைகளைக் கூண்டோடு கைலாசம் போகச் செய்யும் முறை ரொம்ப நன்றாகக் கையாளப்பட்டு வருகிறது. 'அளுக்கொன்று பிடுங்கினாலே அடியேன் தலை மொட்டை' என்றொரு பழமொழி உண்டு. அதே போல, இங்கே இரண்டு லக்ஷம், அங்கே ஒரு லக்ஷம் என்று மொத்த மொத்தமாக ஜெர்மன் படைகள் நிர்மூலமாக்கப்பட்டும், நிராயுதபாணிகளாக்கப்பட்டும் போய்க் கொண்டிருந்தால், ஹிட்லரால் எவ்வளவு காலம் தான் தாக்குப் பிடிக்க முடியும் ?

பெட்ரோலுக்கு லாட்ரி

நேச விமானங்கள், அந்த ஆயிர விமானப் படை யெடுப்புகளை அடுத்தடுத்து நடத்திய வண்ணமாகவே இருக்கின்றன. ஆகவே உள்நாட்டிலும் ஜெர்மனிக்கு ஏக நஷ்டம். அங்கு இப்பொழுது பெட்ரோல் பஞ்சமும் அதிகரித்து வருகிறதாம். விமான மோட்டப் பழகுவோருக்கு அதிக பெட்ரோல் கிடைப்பதில்லையாம். ஆகவே புது விமானிகளின் எண்ணிக்கையும் பெருகுவதில்லை. அதோடு கற்றுக்குட்டி விமானிகள் அதிகமாகிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள் ? சரியாக ஓட்டத் தெரியாது தாங்களும் கோவிந்தா ஆகி, தங்கள் விமானங்களையும் அழித்து விடுகிறார்கள்.

ஜெர்மானியர் கலக்கம்

ஜெர்மனி இனி ஜெயிக்காது என்ற எண்ணம் ஜெர்மானியர் உள்ளங்களிலே எழுந்து விட்டதாம். பல இடங்களில் கூட்டம் கூட்டமாக ஜெர்மன் படைகள் தாமாகவே சரணடைய வருகின்றனவாம். அதனாலே ரஸ்தாக்களில் போக்குவரத்தே தடைப் படுகிறதாம். 'ஹிட்லரால் இனி ஒன்றும் ஆகாது !' என்கிறார்களாம் சரணடையும் வீரர்கள். கொப்பல்ஸ் துரையின் செப்படி வித்தை எல்லாம் இனி ஒன்றும் செய்ய முடியாது. ஜப்பான் பாருங்களேன். இவ்வளவு காலம் அது ஜெர்மனியோடு ரொம்ப இழைந்துக் கொண்டிருந்ததா ? அதுவே, இப்பொழுது, தான் ஏற்கெனவே எதிர் கால வியாபாரத்திற் கென்று ஜெர்மனியில் போட்டு வைத்திருந்த பணத்தையெல்லாம் வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கிறதாம். ஜெர்மனி தோற்றால், அந்தப் பணமும் போய்விடுமே என்ற பீதி அதற்கு. ஆனால் தனக்கும் ஜெர்மனியின் கதியே நேரப் போகிற தென்பதை ஜப்பான் மறந்து விட்டாப் போலிருக்கிறது.

பிரான்ஸிலிருந்த மானமற்ற விஷி சர்க்கார் ஜெர்மனிக்கு இடம் மாறிவிட்டதாம்.

ஆனால் லவால் துரை நேசப் படைகளால் கைது செய்யப்பட்டிருக்கிறாராம். ஆனால் பீதேன் துரை ஜெர்மானியரிடம் கைதியாகி யிருக்கிறார். அவருக்கு உண்மையில் நாஸிகளிடம் பயமோ, பற்றுதலோ கிடையாது. டிகாலிடம் பிரான்ஸை ஒப்படைத்ததாக அவர் ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறாராம்.

என்ன முடிவு ?

பிரான்ஸிலே, சென்ற மகா யுத்தத்தின் போது கடும் போர் நடந்த அதே போர்க் களங்களில் போனவாரம் பயங்கரமான போர் நடந்து கொண்டிருந்தது. போன மகா யுத்தத்திலே என்ன முடிவு ஏற்பட்டதோ அது தான் இப்பொழுதும் ஏற்படும். ஆனால் இத்தடவை ஜெர்மனியோ அதன் சகா நாடுகளோ சரிசமமாக வெற்றி பெறும் நேச நாடுகளுடன் அமர்ந்து சமரசம் பேசப் போவதில்லை. குற்றவாளி நாடுகளாக நின்று தண்டனையைத் தான் பெறப் போகின்றன. அந்நாள் சமீபித்து வருகிறது. அதற்கு முன் இன்னும் சில திடீர்ச் செய்திகள் வந்தாக வேண்டுமே !'

சென்னைக்காரர்களே ! உங்களுக்கு நன்றி

இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் சேவகம் செய்து கொண்டிருக்கும் படையினரிட மிருந்து, சென்னை, கவர்ன் மெண்ட் ஹௌஸ், கூட்டு யுத்த உதவி சப்ளை டிப்போவின் கௌரவக் காரியதரிசிக்குக் கிடைத்த கடிதங்களிலிருந்து சில வாசகங்கள் எடுத்துக் கீழே வெளியிடப்பட்டிருக்கின்றன. தம் வீடு வாசல்களை விட்டு வெகு தூரம் போயிருக்கும் இவர்கள் சென்னையி லிருந்து அனுப்பப்பட்ட பொருட்களை எவ்வளவு தூரம் பாராட்டு கிறார்க ளென்று இதினின்று விளங்குகிறது :—

ஒரு சென்னை சாப்பர் மைனர் படையிட மிருந்து—

"இவ்வளவு அதிகமாக மிட்டாய் வழங்கப்படுவதே இல்லை யாகையால், பல பட்டாளங்களுக்கும் மிட்டாய் வழங்கப் பட்டபோது அதைப் பெரிதும் பாராட்டினார்கள். தம் சொந்த நாட்டிலுள்ளவர்கள் தம்மைக் குறித்து எப்போதும் நினைவு கொண்டிருக்கிறார்கள் என்று கருதும்போது, அவர்கள் ஆறுதலடைகிறார்கள்."

* * *

ஒரு சென்னை இஞ்சினீரிங் படை யிட மிருந்து—

"என்னுடைய உத்தியோகஸ்தருள் ஒருவர் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த போது, கூட்டு யுத்த உதவி சப்ளை டிப்போவுக்கு விஜயம் செய்தார். அவர் இப்போது தான் திரும்பி வந்தார். தன்னுடன் 50,000 சிகிரெட்டுகள், உணவுப் பொருட்கள், ஆட்டக் கருவிகள், கத்தரிக் கோல்கள், புத்தகங்கள் முதலியவற்றைக் கொண்டு வந்தார். இந்தப் படையினருக்கு விநியோகிக்கும் பொருட்டுத் தாங்கள் அன்போடு அளித்தவை தான் அவை.

இங்கே ஆட்டக் கருவிகள் முதலியவை மிகவும் தேவை. அவை இங்கே கிடைப்பதில்லை. எனவே, அவற்றை வாங்கிக் கொண்டு வரும்படி காபிடன் ஹேன்னேயிடம் கூறினேன். சென்னை யுத்த நிதியார் இவ்வளவு தாராளமாகவும் இலவசமாகவும் இவற்றை யனுப்புவார்க ளென்று எனக்குத் தெரியாது.

உண்மையிலேயே தாங்கள் மகா தாராள மனப்பான்மையோடு தான் அனுப்பி யிருக்கிறீர்கள். உங்கள் நன்கொடையை இப்படையைச் சேர்ந்த எல்லாப் பிரிவினரும் மனதாரப் பெரிதும் பாராட்டுகிறார்களென்று நான் உறுதி கூறுவேன்."

* * *

ஒரு சென்னை (இஞ்சினீர்) படையிட மிருந்து—

"இந்தப் படையினருக்கு கவர்னர் யுத்த நிதியார் மிகவும் பரிவுடன் அனுப்பிய 500 நோட்டுப் புத்தகங்களும் 200 பவுண்ட் மசாலைத் தூளும் வந்து சேர்ந்தன. இது பற்றி எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இருவருக்கு ஒரு நோட்டுப் புத்தகம் வீதம் அவற்றை விநியோகித்து விட்டேன். இந்தக் காயிதப் பஞ்சக் காலத்திலே, தமக்கு அவகாசம் கிடைக்கும்போது, தம் உறவினருக்குக் கடிதம் எழுத விரும்பும் இவர்களுக்கு, இந்த நோட்டுப் புத்தகங்கள் கிடைத்த போது, அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.

சென்ற டிசம்பர் மாதம் முதல் மசாலைத் தூள் சப்ளை எங்களுக்குச் சற்று அதிகப் பட்டிருக்கிறது. என்றாலும் இதை விடத் தாங்கள் அனுப்பி யிருக்கும் மசாலைத் தூள் உயர்ந்ததா யிருக்கிறதாகத் தெரிகிறது. தாங்கள் அனுப்பிய மசாலைத் தூளை, ஏதேனும் விசேஷ நாள் விருந்துக்காவது, அல்லது உணவுப் பொருள் சப்ளை முடைப்படும் போதாவது பயன் படுத்திக் கொள்ளும் பொருட்டு, வைத்திருக்கிறேன்.

மகா அன்போடு அனுப்பியுள்ள இதில் சம்பந்தப் பட்டிருக்கும் அனைவருக்கும் இந்தப் பட்டாளத்தைச் சேர்ந்த ஒவ்வொரு இந்தியரும் மனமார்ந்த நன்றி செலுத்துவதாகத் தயவு செய்து அறிவிக்கக் கோருகிறேன்."

ஒரு மோட்டார் போக்கு வரவு ஸ்தானத்திலிருந்து—

"விலை குறிக்கப் படாமல் 1844-ம் வருட ஜனவரி மீ 13உ யிட்ட 3182-ம் நம்பர் பட்டியலோடு 5 பெரிய பார்சல்கள் எங்கள் மத்திய ஸ்தாபனத்திற்கு வந்து சேர்ந்தன. அந்தப் பார்சல்களைச் சோதித்ததில் பட்டியல்படியே இருந்தன. தெற்கே அவர்கள் பழக்கப்பட்டுள்ள வசதிகள் இங்கேயும் அவர்களுக்குக் கிடைக்கும் போது, இந்தியாவின் இப் பகுதியிலுள்ள தென்னிந்தியப்படைகள் அடையும் மகிழ்ச்சியை, அளவிட்டுச் சொல்ல முடியாது. தாம் தம் சொந்த ஊரை விட்டு வெகு தூரத்திற் கப்பால் வந்திருந்தும், தம் சொந்த ஜில்லாக்களி லுள்ளவர்கள் தமக்கு இப்படிப்பட்ட வசதிகளை யனுப்ப வேண்டுமென்று கருதுகிறார்கள் என்று நினைத்து அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி யடைகிறார்கள் என்று எடுத்தெழுத முடியாது. இவ்வளவு அன்போடு தாங்கள் உதவிய நன் கொடை பற்றி இந்த மத்திய ஸ்தானத்திலுள்ள எல்லா சென்னைக்காரர்களும் பெரிதும் நன்றி செலுத்துகிறார்களென்று, கௌரவக் காரியதரிசியாகிய தாங்கள், உங்கள் கமிட்டியாருக்கும் இந்த ஸ்தாபனத்திற்குப் பொறுப்பாளிகளா

ப்ளாரென்ஸ்

பிடிபடுவதற்கு முன்பிருந்த நிலை.



யுள்ள அனைவருக்கும் அறிவிக்கும்படிக் கோருகிறேன்."

* * *

சென்னை சாப்பர் மைனர் பயிற்சிப் படையிட மிருந்து—

"தங்களிட மிருந்து எனது படைக்கு தாராளமாக வசதிப் பொருட்கள் வந்து சேர்ந்தன. எனது சாப்பர்கள் அவற்றை பெரிதும் பாராட்டுவார்க ளென்று, நான் சொல்லத் தேவை யில்லை; அவர்களெல்லாம் ஆட்டங்களில் பெரிதும் விருப்பமுள்ளவர்கள். ஆகவே ஆட்டக் கருவிகள் அவர்களுக்குத் தேவையா யிருந்தன. தங்களுக்கும், யார் யார் உதவிய தொகைகளைக் கொண்டு இந்த நன்கொடைகளை வாங்கினீர்களோ அவர்களுக்கும், என் படையினர் சார்பாகவும் என் சொந்தச் சார்பாகவும் நன்றி கூறுகிறேன்."

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

முதலாவதாக ஆரம்பமானது. இத்தாலி நொறுங்கியது. முசோலினி ஜெர்மனிக்கு ஓடினர். அது முதல் அவரைப் பற்றிய செய்தியே கிடையாது. இத்தாலி சரண் புகுந்தது. பசிபிக் பகுதியிலும் வெற்றிகள் கிடைத்தன. ஜப்பானின் பலவீனங்கள் வெளிப்பட்டன. முதலாவதாக வெளிப் பிரதேசத்திலிருந்த ஜப்பானிய தளங்கள் பிடிபட்டன. ஆஸ்திரேலியா காப்பாற்றப்பட்டது. அலூஷியன் தீவுகளைச் சேர்ந்த கிஸ்கா முதல். நியூ கினி வரை உள் நுழைந்து பல தீவுகளைக் கைப்பற்றினோம்.

வருஷக் கடைசியில் ஆயத்தங்க ளெல்லாம் சரியாயிருந்தன. ஐரோப்பாவை மீட்கும் பொருட்டு. பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைகளுக்கு ஜெனரல் அய்சினோவர் படைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1944, **மீட்சி வருஷம்**.—இந்த வருஷம் செப்டெம்பர் மாதம் 3-ம் தேதியோடு யுத்தம் ஆரம்பமாகி 5 வருஷங்கள் முடிகின்றன. இதை மீட்சி வருஷமென்று சொல்லலாம். இந்த நிகழ்ச்சிகள் சமீபத்தில் நிகழ்ந்தவை யாகையால், அவற்றை இங்கே எடுத்துக் கூற வேண்டிய தேவையில்லை. படையெடுப்புக்கள் சர்வ சாதாரணமாகி விட்டன. பிரான்சில் பாதிக்கு மேல் மீட்சி பெற்றுவிட்டது. ரோமாபுரி, பாரீஸ், மார்செய்ல்ஸ் ஆகிய பெரும் ஐரோப்பிய நகரங்கள் மீண்டும் உயிர் பெற்று விளங்குகின்றன. 5 வருஷங்களுக்கு முன்பிருந்த அச்சம் அடியோடு நீங்கி விட்டது.

இந்தியாவிலுள்ள நாம் பாதுகாப்போடிருக்கிறோம். ஜப்பானியர்கள் பர்மாவில் அமைத்துள்ள அரண்களை 14-ம் படையினர் துளைத்து முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். ஹிட்லருடைய சாம்ராஜயம் சின்னுபின்னப் படுவது போலவே, விரைவில் ஜப்பானையும் சின்னுபின்னப் படுத்தும் பொருட்டுப் புற்றீசல்கள் போல நேசப் படைகள் வந்திறங்கப் போகின்றனவென்று, ஜப்பானிலுள்ள மிக்காடோ முதல் மிகக் கேவலமான அடிமையுங் கூட உணர்ந்திருக்கிறான்.

எதிர் கால வாழ்வு பற்றி நாம் உறுதியோ டிருக்க வேண்டுமானுல், நாம் தனிப்பட்ட ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாடும், உலக யுத்தத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்; யுத்தத்திற்கு என்னென்ன ஆயத்தங்களைச் செய்கிறோமோ, அது போலவே நிர்மாண வேலைகளும் செய்ய வேண்டும்; பலவீனமானவர்களைப் பாதுகாக்க எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். நமது நடவடிக்கைகளை நாம் சீர்ப்படுத்திக் கொள்ள வேண்டும்; அன்பு நெறியை வளர்க்க வேண்டும், அப்போது தான் அது வார்த்தையளவில் இல்லாமல், உலக முழுதும் பரவ வேண்டும்; புதிய இந்தியா அமைய வேண்டும். இவ்வளவையும் சாதித்துக் கொண்டிருக்கும் ஒரு சாதாரணப் போர் வீரனுக்குள்ள தொழிற்பற்று நமக்கும் இருக்க வேண்டும். அவர்கள் முயற்சியால், இந்த யுத்தத்தின் 6-வது வருஷத்தில் பரிபூரண வெற்றி நமக்கு ஏற்படுமென்று சொல்லலாம்.

இந்த வார உலக



யுத்த நாட்

பிரிட்டனும், ஜர்மனியும்.

ஆகஸ்ட்டு 22.—ஹிம்லர், கொயரிங், கொப்பல்ஸ் ஆகியோரும் கூட ஹிட்லருக்கு விரோதமாயிருக்கிறார்களென்று ஜினிவாவிலிருந்து தகவல் கிடைக்கிறது.

ஆகஸ்ட்டு 28.—ஒரு அறிக்கை கீழ்க் கண்டவாறு கூறுகிறது:—

இன்றோடு முடிவாகிற இந்த வாரத்தில் மட்டும் தெற்கு இங்கிலாந்தில், 450 பறக்குங் குண்டுகள் விழுந்தனவென்றும், ஆரம்ப முதல் இது வரை 7,700 பறக்குங் குண்டுகள் விழுந்தனவென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஆகஸ்ட்டு 25.—1944-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 6-ம் தேதி வரை அமெரிக்கப் படையினரில், 48,880 பேர்கள் கொல்லப்பட்டனரென்றும், 1,25,931 பேர்கள் காயப்பட்டனரென்றும், 42,956 பேர்கள் காணப்படவில்லை யென்றும், 43,82 பேர்கள் கைதிகளாகப் பிடிபட்டனரென்றும், அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஸ்டிம்ஸன் கூறினர்.

ஆகஸ்ட்டு 26.—உலகப் பாதுகாப்பு மகாநாட்டில் தம் ஆலோசனைகளைச் சோவியத் பிரதிநிதிகள் சமர்ப்பித்தனர்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஆகஸ்ட்டு 23.—டிட்டிம் ரோடில் எதிரிப் படைகளோடு மீண்டும் போராடும் பொருட்டு நேசப் படைகள் முன்னேறுகின்றன. டாமு-சிட்டாங் பாதையில், எதிரி ஸ்தானங்கள் மீது, பீரங்கிகளும் விமானங்களும் வெடிகுண்டுகளை வீசின.

யுத்தச் செய்திகள்



குறிப்புக்கள்

ஆகஸ்ட்டு 25.—கலந்து ஆலோசிக்கும் பொருட்டு லண்டனுக்குச் சென்றிருந்த லார்ட் லூயி மௌண்ட் பேட்டன் திரும்ப கண்டி வந்து சேர்ந்தார் என்று உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

இது வரை வட பர்மாவில் 10,000 சதுர மைல் அளவிற்கு கைப்பற்றி, 42,000 ஜப்பானியர்களை நேசப் படைகள் கொன்றன.

ஆகஸ்ட்டு 26.—வடபர்மாவில் இங்கியிங்கானை நேசப் படைகள் கைப்பற்றின. சிட்டாங் பாதையில் டாமுவுக்கு 13 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தை எதிரிகள் காலி செய்து விட்டனர். சகானும் கைப்பற்றப்பட்டது.

ஆகஸ்ட்டு 28.—சிண்ட்விநுக்கு 4 மைல் தூரத்திற்குள் 14-ம் படை இருந்தது. பின்பாவின் எல்லையை நேசப் படைகள் அடைந்தன.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

ஆகஸ்ட்டு 22.—ஜாஸி, டார்கு-ப்ருமாஸ் உங்கேனி, ஸம்ப்ரோஸ், முதலிய 300 இடங்களுக்கு மேல் ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 23—வாஸ்லின், அக்கர்மான், டென்விக், பெண்டேரி, டெம்பிட்லா முதலிய பல இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 24.—பெசரேபியாவின் தலைநகரமான கிஷினேவ், பகா, பார்லாட், ஹூசி, ரோமன், ஸ்ட்ராஸெனி, கெய்னுரி, லபுஸ்னு, பைமஸ்லியா, கங்காஸ், டரக்னியா, சியாடெய்லன்வா, முதலிய இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 25.—எஸ்டோனியாவிலுள்ள டார்டுவையும், லியோவா, சகுள் முதலிய இடங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின. ருமேனியா ஜெர்மனி மீது போர் முரசறைந்து விட்டது. ருமேனியப் படைகள், ஹங்கேரிக்குக் கொடுக்கப்பட்டிருந்த ட்ரான்சில்வேனியாவிற்குள் நுழைந்து விட்டன.

ஆகஸ்ட்டு 26.—பழைய ருமேனிய சர்வாதிகாரி ஆன்டனெஸ்கு கைதி செய்யப் பட்டதாக சோவியத் அரசாங்க அறிக்கை கூறுகிறது. கார்பேதியன் கணவாய்களை சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

தாம் பூரண நடு நிலைமை வகிப்பதாக பல்கேரிய அரசாங்கம் சோவியத் அரசாங்கத்திற்கு உறுதி கூறியதுடன், பல்கேரியாவிலிருக்கும் ஜெர்மன் படையினரிடமுள்ள ஆயுதங்களைப் பறித்து விட்டு, ருஷ்யாவுடன் சமாதானம் கோருகிறது.

டான்யூப் ஆற்றின் கடைசிப் பகுதியிலுள்ள இஸ்மாயில் முதலிய :00 இடங்களையும் பட்டணங்களையும் செம்படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 27.—பொச்சானியையும், ருமேனியாவைச் சேர்ந்த ராம்னிகோ-சரத்தையும், டான்யூப் ஆற்றுத் துறைமுகமான கலட்ஸையும் சோவியத் படைகள் கைப்பற்றின. மற்றும் மாய்னெஸ்ட், டார்கோவிஸ்ட் ஆகியவையும் கைப்பற்றப் பட்டன.

ஆகஸ்ட்டு 28.—கார்பேதியன் மலையிலுள்ள ஒரு கணவாய் வழியாக ரஷ்யப் படைகள் ஹங்கேரிய எல்லைப்புரத்தைக் கடந்தன. பல பட்டணங்கள் ஹங்கேரியில் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

ப்ரெய்ல, டல்சியா, சுலினு ஆகிய இடங்களை ரஷ்யப் படைகள் கைபற்றின. புகாரெஸ்டில் ஜெர்மன் எதிர்ப்பு நின்று விட்டது.

பின்லாந்து எல்லைப்புரத்தில் லடோகா ஏரிக்கு அப்பால், சோவியத் படைகள் தாக்க ஆரம்பித்திருக்கின்றன.

இத்தாலி, மத்தியதரைக் கடற் பகுதி.

ஆகஸ்ட்டு 22.—செர்ரேடா, ஆர்ச்சியானே, போக்கியோ ஆகிய ஊர்களை நேசப் படைகள் கைபபற்றின. இத்தாலியைத் தளமாகக் கொண்ட விமானங்கள் வியென்னாவைத் தாக்கின.

1-வது கனடிய ஆயுதந் தாங்கிய படையினருக்கு மிஸ்டர் சர்ச்சில் ஒரு பிரசங்கம் செய்தார்.

ஆகஸ்ட்டு 23.—இத்தாலிய முதன் மந்திரி சைனர் பொனுமிக்கும் படோக்ளியோவுக்கும் மிஸ்டர் சர்ச்சில் பேட்டி கொடுத்தார்.

ஆகஸ்ட்டு 24.—மாண்டி மகாயிரிலிருந்து 12 மைல் தூரமுள்ள எட்ரியாடிக் கடல் வரையிலும் நேசப் படைகள் வேரூன்றிக் கொண்டபடியால், மடாரோ போராட்டம் முடிந்து விட்டது.

மௌண்ட் பாரெஸ்டோவையும் காலியையும் நேசப் படைகள் கைப் பற்றின.

வாழ்ந்ததடா பாரிஸ்

SECRETARIAT LIBRARY
28 FEB 1946
MADRAS GOVERNMENT

இராகம்—வஸந்தா தாளம்—ஆதி

பல்லவி

வாழ்ந்த தடா பாரிஸ் வளநகரம்—மீண்டும்
வந்ததடா ப்ரான்சு நாட்டின்கரம் (வா)

அனுபல்லவி

விழ்ந்த தடா நாசி வெறுப்புப் படையோடி
விய்ந்த தடா தொல்லை ஒய்ந்ததடா இன்றே (வா)

சரணங்கள்

1 நாற்பது ஐமின் முதலே நான்கு வருடம் தானே
நாசிப் படைவரிடம் நலிந்து மெலிந்தடிமை
ஏற்பது வாயிருந்தும் எழில் மிகும் வீரம் கொண்டே
எடுத்த ஆயுதங்களால் தொடுத்து யுத்தமும் வென்றே (வா)

2 வாழ்வின் விடுதலைக்கே வாளெடுத் தென்றும் ஓங்கி
வைய முழுதும் புகழ் வாரி இறைத்த நகர்
தாழ்வில இருந்திடினும் தக்க தருணம் பார்த்தே
தாங்கிப் படை பகையைத் தாக்கித் தன் கொடி தூக்கி (வா)

K.M.B.

நேசப்படைகள் ஆர்னோ ஆற்றைக் கடக்கின்றன.

ஆகஸ்ட்டு 25.—மிஸ்டர் சர்ச்சில் போப்பை சந்தித்துப் பல முக்கியமான விஷயங்களைக் குறித்துப் பேசினார்.

அக்வலக்ஞ, காஸில்னேவோ, பார்னிஷி, லாமாண்டனினு ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 28.—8-ம் படை முன்னேறிப் போய், இசோலா டெல்பியானோ, மொம்பராஸ்ஸியோ ஆகிய இடங்களை வசப்படுத்திக் கொண்டு, பாஸ்ரோவின் எல்லைப்புரத்தை யடைந்தன.

விஷி, சுயேச்சை பிரான்க், எதிரி வயப்பட்ட நாடுகள்

ஆகஸ்ட்டு 22.—சென்ட் அண்ட்ரு டிலயூர், நோனன்கௌண்ட், வெர்னெயில் முதலிய இடங்களை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஆகஸ்ட்டு 23.—உள்நாட்டுப் பிரஞ்சுப் படைகளால் பாரிஸ் மீட்சி பெற்றது. ஜெனரல் கோனிக் பாரிஸ் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நேசப் படைகள், சான்ஸ், பிதிவியர்ஸ், ஈடாம்ப்ஸ் ஆகிய இடங்களை பிட்டன. நேச நாடுகளின் சமரச நிபந்தனைகளை ருமேனியா ஒப்புக் கொண்டு, ஜெர்மனியின் உறவை ரத்துச் செய்துகொண்டது. ஒரு புதிய தேசிய அரசாங்கம் அமைந்தது.

யுகோஸ்லாவியாவிலுள்ள சுயேச்சைப் படைகள் லயானியைப் பிடித்தன.

ஆகஸ்ட்டு 24.—எல்பா, லூவியர்ஸ், லா யோபர்க் முதலிய இடங்களை நேசப் படைகள் பிடித்தன.

தென் பிரான்சில், லியான்ஸ், பார்டோ, சாலன், பெர்பிக்னன் முதலியவை பிடிபட்டன.

ஆகஸ்ட்டு 25.—மர்ம்டெரோ, திபர் வில்லா, போரெட்டிசென்ட் கட்டீன், டூர் வில்லா ஆகிய இடங்களை நேசப்படைகள் கைப்பற்றின. தென் பிரான்சின் கீழ்ப் பகுதியில், கான்னிஸ், க்ராசி என்னும் இடங்களை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

பிரான்சின் சிவில் அரசாங்கம் இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

ஆகஸ்ட்டு 26.—பாரீசுக்கு 40 மைல்கள் கிழக்கேயுள்ள மான்டெரோவை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டு, பாண்ட் அண்டிமெர் வந்து சேர்ந்தன. மேலன் மீட்கப்பட்டது.

ஆர்விஸ், டெரெஸ்கோன், அரிக்னன், காவெய்லான், கார்பென்ட்ராஸ், ப்ரியான்கோன் முதலியவை நேசப் படைகள் வசமாயின.

ஆகஸ்ட்டு 27.—சீன் ஆற்றை நேசப் படைகள் பலவிடங்களில் கடந்து விட்ரி, பியோ, போர்டினே, செண்ட் லூபியென் ஆகிய இடங்களுக்கு வந்து சேர்ந்தன.

தென் பிரான்சில் டூலான் முழுதும் வயப்பட்டு விட்டது. டைம்ஸ், மான்ட் பெலையர் சார்கசோன் ஆகிய இடங்களை பிரஞ்சுப் படைகள் மீட்டன.

பிரெஞ்சு பாஸிஸ்டுகள் டிகாலே நோக்கிச் சுட்டார்கள்; அவருக்குக் காயம் படவில்லை. லவால், பிட்டெய்ன், அட்மிரல் டிரோஸ், ஜெனரல் ப்ரிடோ ஆகியோரை ஜெர்மன் ரகசியப் போலீசார் கைது செய்ததாகத் தெரிகிறது.

ஆகஸ்ட்டு 27.—ஜெனரல் அய்சினோவரும் மற்ற இராணுவத் தலைவர்களும் பாரீஸில் உத்தியோக முறையில் பவனி வந்தனர்.

ஆகஸ்ட்டு 28.—மெர்னு அரணை ஜெர்மானியர்கள் கைவிட்டு விட்டனர். லியான் பிரஞ்சுப் படைகள் வசமானது.

நடு நிலைமை நாடுகள்.

ஆகஸ்ட்டு 23.—ஜெர்மனியின் உறவை ரத்துச் செய்துவிடுவதென்று ஸ்வீடன் தீர்மானித்து விட்டது.

ஆகஸ்ட்டு 27.—ஜெனரல் மிஹிலோவிச், படைத் தலைமைப் பதவியினின்று நீக்கப் பட்டாரென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

தூரக் கிழக்கு நாடுகள்

ஆகஸ்ட்டு 23.—ஒருபோதும் எற்பட்டிராத அளவுக்கு மகத்தான தோர் நெருக்கடி தம் நாட்டிற்கு எற்பட்டிருப்பதால், ஜப்பானிய மக்கள் அதைச் சமாளிக்க வேண்டுமென்று ஜப்பானிய முதன் மந்திரி காய்சோ வேண்டிக் கொண்டார்.

ஆகஸ்ட்டு 25.—செப்டெம்பர் மாதம் 6-ம் தேதி முதல் 5 நாட்களுக்கு ஜப்பானிய அரசாங்க சபையின் விசேஷக் கூட்டம் நடைபெறவேண்டுமென்று ஜப்பானிய மந்திரி சபை இன்று தீர்மானித்தது.

ஆகஸ்ட்டு 27.—பிலிப்பைன் தீவின் தலைநகரான மணிலா காலி செய்யப்படுவதாகத் தெரிகிறது.

ஆகஸ்ட்டு 28—ஜப்பானிய கையுஷு என்னும் தீவை, அமெரிக்கப் பெருங்கோட்டை விமானங்கள் தாக்கின. போனின் தீவுகளைச் சேர்ந்த ட்வோஜிமா மீது நேச விமானங்கள் வெடி குண்டுகளை வீசின.

டோக்கியோவிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகர் ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரியோடு சமீப காலத்தில் ஐரோப்பவில் எற்பட்டுள்ள நிலைமை பற்றிக் கலந்து பேசினார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS